விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி16 சனிக்கிழமை (02.11.2002) தொலைபேசி- 2223378 ஒலி 318

நந்தா
புடைவையகம் அன் பான்சி ஹவுஸ்
* ரெடிமேட் ஆடைகள் * ஸ்கேட் அன் பிளவுஸ் * சல்வார் கமிஸ் * நவீன டிசைன்களில் பலரக சாறிகள்
* ஜீன்ஸ் துணிகள் * அழகு சாதனப் பொருட்கள்
போன்றவற்றை பெற்றுக் கொள்ளலாம்.
யாழ்வீதி, மானிப்பாய்

## அரசு மூன்றில் இரண்டு பலத்தைப் பெற

# பாராளுமன்றத்தைக் கலைத்து

# தேர்தலை நடத்துவதே ஒரே வழி

## ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கருத்து

## நீதிமன்றத்தின் தீர்ப்புக்குக் கண்டனம்

(பாங்கொங்கில் இருந்து அன்ரனி ஜீவா)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு பற்றி எமக்கு எந்த விதமான கவலையுமில்லை. இலங்கையின் நீதித்துறையில் தலையிடவும் விரும்பவுமில்லை. ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தை கனிந்து வரும் நேரத்தில் இத்தகைய தீர்ப்பு வழங்கப்பட்ட முறைமையை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் எனக் கூறிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ,**

**19வது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தில் அரசாங்கம் தோல்வியைத் தழுவியுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாது சமாதான முயற்சிக்களை பாராளுமன்றத்தில் எப்படிக் கையாளப் போகிறீர்கள் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.**

மத்திய வங்கிக்குண்டு வெடிப்பு சம்பந்தமான வழக்கிலே கொழும்பு உயர் நீதிமன்றம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 200 வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளமை குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒட்டுமொத்தமான கண்டன்த்தை தாய்லாந்துப் பேச்சுவார்த்தையின் போது நேற்று தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்

(10ம் பக்கம் பார்க்க)



பிரபாவிற்கு 200வருட சிறைத்தண்டனை

## உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு தமிழ்ச் செல்வன் கடும் கண்டனம்

(பாங்கொக்)

கொழும்பு உயர் நீதிமன்றம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 200வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள ளமையை விடுதலைப்புலிக ளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் நேற்றுப் பலமாகக் கண்டித்துள்ளார்.

பாங்கொங்கில் நேற்று நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையின் போதே அரசுதரப்பு பிரதிநிதிகளிடம் நேர்முகமாகத் தனது பலத்த கண்டனத்தை தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். மத்திய வங்கிக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கொழும்பு உயர் நீதிமன்றம் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு 200வருட சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்கள் கூட்டாக இணைந்து செயற்படுவர்

### அமைச்சர் ஹக்கீம், கேணல் கருணா இணக்கம்

(பாங்கொங் - அன்ரனி ஜீவா)

கிழக்கு மகாணத்தில் தமிழ்

தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின்

## உருக்குலைந்த சிசுவின் சடலம் கிணற்றில் இருந்து மீட்பு

## இளவாலையில் சம்பவம்

(ஏழாலை)

அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கு அருகில் உள்ள காட்டு பகுதியில் கிணற்றுக்குள் இருந்து சிசு ஒன்றின் உருக்குலைந்த சட

## உயர் பாதுகாப்பு வலயங்களில்

(பாங்கொங் - அன்ரனி ஜீவா)

கிழக்கு மகாணத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் தங்களுக்கிடையே ஒற்றுமையைப்பேணி,' விவசாயம், பண்ணை விவசாயம், மீன்பிடி மற்றும் வர்தகம் என்பவற்றை தங்கள் தங்கள் இடத்தில் மேற்கொள்ளவும், பறிக்கப்பட்ட இடங்களை மீண்டும் பரிமாறிக்கொள்வதிலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணாவுக்குமிடையே இணக்கம் காணப்பட்டுள்ளது.

அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கும், மூத்த தளபதி கேணல் கருணாவிற்குமிடையிலான இந்த இணக்கமானது நேற்று இரண்டாவது நாளாக தாய்

(10ம் பக்கம் பார்க்க)

கல்லூரிக்கு அருகில் உள்ள காட்டு பகுதியில் கிணற்றுக்குள் இருந்து சிசு ஒன்றின் உருக்குலைந்த சடலம் இளவாலைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

உரைப்பை ஒன்றினுள் போடப்பட்ட நிலையில் இருந்த சடலமே பொலிசாரால் நேற்று மீட்கப்பட்டது.

மீகப்பட்ட சிசுவின் சடலம் மருத்துவப் பரிசோதனைக்காக யாழ் போதனாவைத்தியசாலையில்

(10ம் பக்கம் பார்க்க)

பெற்ற சமாதானப் பேச்சுவார்த்

# உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவர்?

## பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டதாக தகவல்

(பாங்கொங்)

முஸ்லிம்கள் தொடர்பான விவகாரங்களை உரிய நேரத்தில் எடுத்து ஆராயலாம் அது பற்றி கருத்துத் தெரிவிப்பதற்கு இன்னும் காலம் உள்ளது என்று புலிகளின் பேச்சாளர் அன்ரன்பாலசிங்கம் பேச்சுக்களுக்கு புறம்பாக கருத்து தெரிவிக்கையில் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து பாதுகாப்பு அண்டிய பகுதிகளில் இருந்து பாதுகாப்பு படையினரை , மீளப்பெற செய்வ்திலேயே தமது தரப்பு கவனம் செலுத்துகிறது என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை உயர்பாதுகாப்பு வலயங்களை அண்டிய பகுதிகளில்மீள் குடியேற்றங்களை மேற்

(10ம் பக்கம் பாக்க)

# முஸ்லிம்களுக்கு தனி அலகு தராவிட்டால் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும்

## பிரதி அமைச்சர் அதாவுல்ல உரை

(மட்டக்களப்பு)

இடைக்கால நிர்வாக சபையில பிரதி முதலமைச்சர் பதவி முஸ்லிம்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் அதாவுல்ல தெரிவித்துளளார்.

கடந்த 30ம் திகதி அக்கரைப்பற்றில் நடைபெற்ற பரிசளிப்பு விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சு வார்த்தையில் மூன்றாம் தரப்பாக முஸ்லிம் காங்கிரஸ்சும் பங்குபற்றுவதன் மூலம் மட்டுமே முஸ்லிம்களின் அபிலாசைகள் தீர்க்கப்படுமென நம்புகின்றேன்.

இடைக்கால நிர்வாக சபையில பிரதி முதலமைச்ச்ர் பதவி முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டும் அல்லது புலிகளுக்கு எவ்வாறான அதிகாரம் கொண்ட சுயாட்சி வழங்கப்படுகிறதோ அதே மாதிரியான அதிகாரங்களைக் கொண்ட தனி அலகு முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு தனியான முஸ்லிம் பொலிஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும். இது தமிழருக்கு வேறு, முஸ்லிம்களுக்கு வேறாக அமைந்தால் மட்டுமே இதனை நாம் ஆதரிப்போம்.

வடக்குக் கிழக்கு இணைந்த நிர்வாக அலகினை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம் அத்துடன் வடமாகாணம் வேறாகவும் கிழக்குமாகாணம் வேறாகவும் அமைந்தால்

(10ம் பக்கம் பாரக்க)

# இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் மீண்டும் வன்னியில் குடியமர அனுமதி

## இணைப்பாளர் மர்சூக் அகமட் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிப் பகுதியில் ஏற்கனவே குடியிருந்த முஸ்லிம் மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு வருவார்களானால் அவர்களுடைய இருப்பிடங்கள் மீணடும் அவர்களிடம் கையளிக்கப்படுமெனவும் பள்ளிவாசல் அமைத்து கொடுக்கப்படுமெனவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் தெரிவித்திருப்பதாக துறைமுக அபிவிருத்தி,கப்பல் துறை, கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் சமய விவகார அமைச்சின் இணைப்பாளர் மர்சூக் அகமட் லெப்பை வலம்புரிக்குத் தெரிவித்தார்.

அமைச்சர் ரவூப்ஹக்கீமின் இணைப்பாளர் மர்சூக் அகமட்

(10ம் பக்கம் பார்க்க)

### சிறு விளம்பரம்

**GCE O/L**

பரீட்சை மைய ஆங்கில இலக்கண இலக்கிய வகுப்புக்கள் Exam oriented English Language Literature Classes) ஆரம்ப 2-11-2002 பதிவுகள் 31-10-2002 முதல் தொடர்பு கோ. சுப்பிரமணியம் 62 பழம் றோட் கந்தர்மடம்.

(6154)


## விதை உ. கிழங்கு விநியோகம்

(இணுவில்)

உடுவில் கமநல சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்தவர்களுக்கான விதை உருளைக் கிழங்கு தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

(உ-49)

### அரசு - புலிகள் புரிந்துணர்வு

# ஒப்பந்தம் ஏற்பட்டு 250 நாட்கள் நிறைவில்

# பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம்

## மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்டு கடந்த 31 ஆம் திகதியுடன் 250 தினங்கள் முடிவடைந்துள்ள நிலையில் குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது குறித்து மக்கள் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில்;

கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது, இலங்கையின் ஏற்றுமதிகள் 33 சதவீதத்தினால் அதிகரித்து 568 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற அளவை அடைந்துள்ளன.

இதேவேளை, இக்காலப் பகுதியின் இறக்குமதி 6 சதவீதத்தினால் குறைந்துள்ளன.

தேசத்தின் மொத்த உற்பத்தி அளவு கடந்த ஆண்டில் மறை எண்ணாக இருந்தது. ஆனால், இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களில் 1.4 சதவீதத்தை அடைந்துள்ளது.

இதேவேகத்தில் செல்லுமாயின் மூன்றாம் காலாண்டில் 4-4 5 சதவீத வளர்ச்சியை எதிர்பார்க்க முடியும்.

2001 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது சுற்றுலாத்துறை 52 சதவீதத்தினால் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

## ஆஸி. கரித்தாஸ் நிறுவன அதிகாரிகள் யாழில்

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலிய கரித்தாஸ் நிறுவன அதிகாரி அ.டிறோஸ் மற்றும் செடெக் நிறுவன உறுப்பினர்களான எஸ். குயிரஸ் எஸ்.சகாயராஜ் ஆகியோர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

யாழ்குடாநாட்டில் மீள் குடியேற்றம் யாழ்குடாநாட்டில் உள்ள விதவைகளின் பொருளாதார மேம்பாடு ஆகியன குறித்து இவர்கள் ஆராயவுள்ளனர்.

(உ-6)

# மாளிகாவத்தையில் 5,000

# இராணுவத்தினர் தீவிர ரோந்து

(கொழும்பு)

கொழும்பு வடக்கு, மத்தி, மற்றும் மாளிகாவத்தையின் பாதுகாப்பு கருதி சுமார் 5ஆயிரம் பாதுகாப்பு படையினர் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என உள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொழும்பு வடக்குப் பகுதியின் பாதுகாப்பு கருதி 10இராணுவ குழுக்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும்.

பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே இராணுவத்தினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரட்ண தெரிவிந்துள்ளார்.

மாளிகாவத்தை சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்க விசேட குழு அதன் அறிக்கையை இன்னும் இரு நாட்களில் சமர்ப்பிக்கவுள்ளது.

இதேவேளை கொழும்பில் சில பகுதிகளில் நேற்று பிற்பகல் 2.00மணியிலிருந்து இன்று காலை 6.00மணி வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்திருந்தது.

முகத்துவாரம், கொட்டாஞ்சேனை, கிராண்பாஸ், தெமட்டகொட, மருதானை. வாழைத்தோட்டை மற்றும் மாளிகாவத்தை ஆகிய பிரதேசங்களிலேயே மீண்டும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

நேற்றுப்பகல் அங்கு அமைதி நிலவியதாகவும், மாளிகாவத்தை ஜும்மா பள்ளிவாசல் தொழுகை மிகவும் சுருக்கமான முறையில் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ- 8)

## நீதிபதிகள் குழு இன்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு மீளக்குடியமர்த்தல் மற்றும் அகதிகள் விவகாரங்க அமைச்சர் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன அனுசரணையுடன் இலங்கை நீதிச்சேவையாளர் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் நீதிபதிகள் மற்றும் மாவட்ட நீதிபதிகளை உள்ளடக்கிய குழுவினர் இன்றுசனி கிழமைஅதிகாலை கொழும்பு 12 நீதி அமைச்சின் வளாகத்தில் இருந்து நல்லெண்ண விஜயம் ஒன்றினை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இவ் விஜயத்தின் நோக்கம் தற்பொழுது முன்னெடுக்கப்படுகின்ற சமாதான நடவடிக்கைகளிற்கு மேலும் வலுவூட்டுவதுடன் யாழ் மக்களின் வாழ்க்கை தரத்தினை அறிந்து கொள்வதும் தமது சகோதர சட்டத்துறை சார்ந்தவர்கள் அங்கு தற்பொழுது எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகளை அறிந்துகொள்வதுமாகும் என இந்த குழுவில் முக்கிய பங்களிப்பினை செய்து வருகின்ற நீதிச்சேவையாளர் சங்கத்தின் செயலாளர் நீதிபதி ஜி.டி குலதிலக தெரிவித்தார்.

(உ-6)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையில் இரு மோட்டார் சைக்கிள்கள்ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஒருவர் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் போது காரைநகரைச் சேர்ந்த ப-விமலச்சந்திரன் (வயது23) என்பவரே காயமடைந்தவராவர்

(5,6)

## வெளிநாட்டு நிதியுதவியின் ஒருபகுதி வீண்விரயம்

(கொழும்பு)

சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு வெளிநாட்டு நிதியுதவியாக வழங்கப்பட்ட தொகையின் ஒரு பகுதி வீண்விரயம் செய்யப்பட்டுள்ளதாக சிறுதேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடனான கூட்டத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

1999ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெளிநாட்டுநிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட 810மில்லியன் ரூபாவில் 631மில்லியன் ரூபாவீண்விரயம் செய்யப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட வெளிநாட்டு நிதியுதவி உரியமுறையில் பயன்படுத்தப் பட்டிருந்தால். சிறுதேயிலைத்தோட்ட உரிமையாளர்களின் வீடு, மற்றும் வீதிஅபிவிருத்தி உட்படசேம நலஅபிவிருத்தி தொடர்பாக பாரிய திட்டங்களை மேற்கொண்டிருக்கலாம் எனவும் அவர்சுட்டிக்காட்டியுள்ளார்-

(உ-8)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் நாளை காலை 10மணிக்கு சுனில்ஆரியரத்ன இயக்கிய ''சருங்கலே'' எனும் திரைப்படம் புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார்.

(ந- 5)

### 2-ம் கட்ட

# ஆரம்ப பேச்சில் நோர்வே திருப்தி

(கொழும்பு)

அரசாங்க பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும்இடையில் தாய்லாந்து றோய்கார்டன்ரிசோர்ஹோட்டலில் நேற்றுமுன்தினம்ஆரம்பமான முதலாவது சுற்று இரண்டாம் கட்ட முதல்நாள் பேச்சு வார்த்தை வெற்றியளித்துள்ளதாக நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தெரிவித்துள்ளார்.

இப் பேச்சு வார்த்தைகளின் போது வடக்கு கிழக்கு பகுதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் உத்தேச கூட்டு நடவடிக்கைக் குழு அமைப்பு என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒஸ்லோவில் அடுத்த மாதம் 22 ம் திகதி நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் குழுக்கூட்டத்திற்கு முன்னதாக கூட்டு நடவடிக்கை குழு அமைக்கப்படுவதற்கு இருதரப்பு பிரதிநிதிகளும் உடன்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இக் குழுவின் பரிந்துரைக்கு அமைய உதவி வழங்கும் நாடுகளின்குழுக்கூட்டத்தில் அபிவிருத்தி உதவிகள் கோரப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## ஒக்டோபர் மாத நிவாரணம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களுக்கான ஒக்டோபர்மாத நிவாரணம் இதுவரை வழங்கப்படவில்லை.

ஒக்டோபர் மாதநிவாரணத்துக்குரிய நிவாரணப் பொருட்கள் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்ட போதும் சிலசங்கங்களுக்கு வழங்கப்பட்ட அரிசி மீளவும் பெறப்பட்டுள்ளது.

இதனால் இடம்பெயர்ந்த மக்கள் நிவாரணம் இல்லாமல் பல்வேறு கஷ்ரங்களை எதிர்நோக்குகின்றனர்.

தீபாவளிபண்டிகை தினத்தை முன்னிட்டும் இதுவரை இந்நிவாரணம் வழங்கப்படாமைகுறித்து இடம்பெயர்ந்த மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்-

(ம-5)

## பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் பாடசாலை மாணவர்களிடையே இன்று நடாத்தவிருந்த பேச்சுப் போட்டி, எதிர்வரும் 9-ம் திகதி யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் காலை 10-30 மணிக்கு நடைபெறும் என விஞ்ஞானச் சங்கத்தின் உதவிப் பொதுச் செயலாளர் என். ஞானகுமாரன் தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் வலிகாமம், தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய கல்வி வலய மாணவர்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த- 5)

### மக்கள் நடத்தும்மறியல் போரினால்

# தென்மராட்சி பிரதேச செயலகம்

# 2-வது நாளாக நேற்றும் செயலிழப்பு

(தென்மராட்சி)

மீசாலை வடக்கு மந்துவில் கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் தென்மராட்சி பிரதேசசெயலகம் முன்பாக நேற்று இரண்டாவதுநாளாகவும் நடத்திய மறியல்போராட்டம் காரணமாக நேற்று பிரதேச செயலகம் செயலிழந்தது.

மேற்படி பகுதிகளிலுளள வீடுகளில் நிலைகொண்டுள்ளடையினரை வெளியேற்றித் தம்மைத் தமதுசொந்தஇருப்பிடங்களில் வாழஉதவும்படி கோரியே அப்பகுதி மக்கள் பிரதேசசெயலகம் முன்மறியல் போரில் ஈடுபட்டனர்.

நேற்று இடம்பெற்ற மறியல் போராட்டத்தில்மீசாலை வடக்கு மந்துவில்கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்களும் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின் உயர்தர வகுப்பு மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.

இப் போராட்டத்தினால் பிரதேசசெயலக ஊழியர்கள் வெளியில் காத்திருந்துவிட்டு வீடுசென்றதுடன் பிரதேச செயலகத்துக்கு தமது அலுவல்கள் காரணமாக வந்த பொதுமக்கள் காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் சென்றதையும் காணமுடிந்தது.

(உ-77)

# அமையவுள்ள அரசு-புலிகள் கூட்டுச் செயலணி

# சட்டச் சிக்கலை எதிர்கொள்ளுமா?

(கொழும்பு)

**ஆரம்பமாகிவிட்ட அரசு-புலிகள் முதல் சுற்றுப் பேச்சின் இரண்டாம் கட்டத்தில் இரு விடயங்கள் இடம்பெறுகின்றன.**

**இதில் முக்கியமானது வடகிழக்கின் அபிவிருத்திக்கு வித்திடும் வகையில் அமையப்போகின்ற கூட்டுச் செயலணி.**

**இக்கூட்டுச் செயலணியின் செயற்பாடுகள், இலங்கை அரசியல் யாப்பிற்கு ஏற்புடையதா, இது விடயம் சட்டச் சிக்கலை ஏற்படுத்துமா ஆகியன குறித்து ஆராய்கிறார் அரசியல் ஆய்வாளர் வி. ரி. தமிழ்மாறன்,**

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகி உள்ளன.

இதில் இடம்பெறும் முக்கிய விடயங்கள் இரண்டு. ஒன்று வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கும் இயல்பு வாழ்க்கைக்கும் வித்திடும் வகையில் செயற்படுவதற்கென கூட்டுச் செயலணி ஒன்றை அமைத்தல். மற்றும் உதவி வழங்கும் நாடுகளுடன் நடத்தவுள்ள உரையாடல்களில் இரு தரப்பும் கூட்டாக பங்குபற்றல் என்பனவே அவை.

இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டவை என்பது கூறி விளங்க வேண்டியதில்லை.

### கூட்டுச் செயலணி வரைபு வெளியானது

கூட்டுச் செயலணியின் அமைப்பு, அதனது அதிகாரங்கள், பணிகள் பற்றிய வரைபு கடந்தவாரம் வெளியிடப்பட்டுள்ளது. இது ஓர் கூட்டுத் தயாரிப்பு ஆகும்.

வடக்கு - கிழக்கு மக்களுக்கும் நாட்டின் ஏனையபகுதி மக்களுக்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதைப் பிரதான இலக்காகக் கொண்டு இச் செயலணி அமைக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இதில் விடுதலைப் புலிகளும் ஒருசமபங்காளியாக இருப்பது தான் சிறப்பு அம்சமாக கூறப்படுகின்றது.

குறுகிய அளவில்பார்த்தால், வடக்கு-கிழக்கு மக்களின் இயல்புவாழ்க்கை என்பதில் இருதரப்பினரும் ஒரேஅளவு சிரிசனைகொண்டிருப்பதாக இந்த முயற்சி அமைகிறது. 7 பேரைக்கொண்ட இக் கூட்டுச் செயலணியில் மூவர் அரசாங்கத்தினாலும் மற்றைய மூவர் விடுதலைப்புலிகளினாலும் நியமிக்கப்பட மற்றைய ஏழாவது நபர் நோர்வே அரசாங்கத்தின் சார்பில் இடம் பெறுவார்.

### செயலணி அங்கத்தவர்கள்

தற்போதைய பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்பவர்களில் இருதரப்பில் இருந்தும் கட்டாயமாக ஒவ்வொருவர் இக்குழுவில் இடம் பெறுவர் எனத் தெரிய வருகிறது.

வடக்கு-கிழக்கு என்று வரும் பொழுது அதில் தற்போது வசித்துவரும் முஸ்லிம், சிங்கள மக்களின் பிரதிநிதிகளும் இக் குழுவில் இடம் பெறுவார்களா என்பது தெரிய வில்லை.

ஆனால் அமைச்சர் ரவூவ் ஹக்ஹீம்அரசாங்கத்தின் பிரதிநிதியாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கின்றார். எனவே, அவருடன் சேர்த்து மேலும் இருவரை இக் குழுவில் அரசாங்கம் நியமிக்க கூடும்.

> கூட்டுச் செயலணியின் சட்டத்தன்மை பற்றியதாக பல்வேறு பாரதூரமான வினாக்கள் தற்போது எழுப்பப்படுகின்றன.
>
> இச் செயலணியானது நாட்டின் சட்டக் கட்டமைப்பிற்கு உட்பட்டதாக அமைய வேண்டும் என்று ஜனாதிபதி எச்சரிக்கைத் தொனியுடன் ஏற்கனவே அறிவித்துவிட்டார்.

ஆனால், வடக்கு-கிழக்கு அபிவிருத்தி விடயங்களை கவனிப்பதற்கென எல்லாவகைத் தகுதிகளையும் தமது கட்சித் தலைவர்கொண்டுள்ளார் என்பதை இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானிக்க வேண்டி வரும்.

மிகப்பாரதூரமான வினாக்கள் இக்கூட்டுச் செயலணியின் சட்டத் தன்மையைப் பற்றியதாகவே தற்பொழுது எழுப்பப்படுகின்றன.

### ஜனாதிபதி எச்சரிக்கை

இச்செயலணியானது நாட்டின் சட்டக் கட்டமைப்பிற்கு உட்பட்டதாக அமைய வேண்டும் என்று ஜனாதிபதிஎச்சரிக்கைத் தொனியுடன் முன்னரே அறிவிப்புச் செய்துள்ளார்.

குறிப்பாக இலங்கையின்அரசியல் அமைப்பிற்குஇசைவற்ற முறையில் இச்செயலணி செயற்படுவதை ஆட்சேமிப்பதற்கு பல அமைப்புகள் தயாராகி வருகின்றன.

செயலணியானது, அது குறித்து ஆக்கப்பட்ட அதிகாரங்களின் படி, பிரதமர் அலுவலகத்தில் இயங்கும் ஓர் அமைப்பாக உருப்பெறுகின்றது.

அதாவது, பிரதமரின் நேரடிக் கண்காணிப்பில்இயங்கும் ஓர் அமைப்பு இதுஆனால்இது எந்த நியதிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது என்பது தெரியவில்லை.

அப்படியானால், அதனது சட்ட அந்தஸ்த்து என்ன? வெறுமனவே நிர்வாக ஏற்பாடு ஒன்று இன்று முடிந்து விடுமா?

இதன் முக்கியமான மூன்று பணிகளாக,

- கொள்கைத்திட்டங்களை உருவாக்குதல்;
- தேவையான மூலவளங்களை தேடிச் சேகரிப்பதில் பங்கு தாரராக இருத்தல்.
- அமுலாக்கல் விடயங்களை தெரிவு செய்தலும் மேற்பார்வை இடுதலுமாக இருத்தல் என்று கூறப்படுகின்றது.

### திட்டமிடல் அமைச்சின் பணி இது

கொள்கைத் திட்டங்களை வகுத்தல் என்பது பெரும் உறுத்தலான விடயம், இது பொதுவில் திட்டமிடல் அமைச்சுக்கு உரிய ஒரு பணியாகும்.

இதனை இச் செயலணி தனது கையில் எடுத்து நாட்டின் ஒரு பகுதியைக் கருத்திற் கொண்டு செயற்பட்டால் திட்டமிடல் அமைச்சின் பணி குறைவடைந்து விடும்.

இது சட்ட அங்கீகாரமின்றி சாத்தியப்படும் விடயமாகும்.

சட்ட அங்கிகாரம் என்று வரும் பொழுது அது அரசியல் அமைப்பிற்கு முரணானது என வாதிட முடியும்.

உண்மையில் ஆரம்பத்தில் யோசிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் இத்தகைய சட்டச் சிக்கலை ஏற்படுத்தி இருந்ததால் அது திடீரென கைவிடப்பட்டு, கூட்டுச் செயலணி பற்றிய சிந்தனை தோன்றி இருக்கின்றது.

### சட்டச் சிக்கல் நீங்குமா?

ஆனால் எத்தனை வருடங்களுக்கு எவ்வளவு அதிகாரங்களுடன் இச் செயலணி செயற்படப் போவதென்பதும் சட்டசிக்கலில் இருந்து இது முற்றாக விடுவிக்கப்படும் என்பதையும் கூறிவிட முடியாது.

உதவி வழங்கும் வெளிநாட்டு அரசுகள் மற்றும் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைநடத்துகையில் அரசும் புலிகளும் சமபங்காளிகளாக இருப்பர் என்றும், ஆனால் இவற்றுக்காக செய்யப்படும் ஒப்பந்தங்கள்யாவும் அரசின் சார்பாகமட்டுமே ஏற்படுத்தப்படும் எனவும்வரைபு கூறுகின்றது.

விடுதலைப்புலிகள் தமது கைவசம் கொண்டுள்ள ஆட்புல கட்டுப்பாடு என்பது அங்கிகரிக்கப்பட்டு அவர்களது, சம்மதத்துடனே அப்பகுதிகளில்அபிவிருத்திமேற் கொள்ள முடியும் என்பதை காட்டுவதற்காக இந்த பங்கு தாரர் ஏற்பாடு எனக்கூறலாம்.

### அரசியல் அமைப்பு அனுமதிக்காது

ஆனால், மறுபுறத்தில் ஒரு நாட்டின் பொதுச் செயலனம் தொடர்பாக சட்ட ரீதியிலான கட்டுப்பாடுகளை உதாசீனம் செய்துவிட்டு அரசாங்கம் தான் நினைத்தபடி செயற்படுவதை அரசியல் அமைப்பு அனுமதிக்காது,

இலங்கை அரசியல் அமைப்பின் 154 வது பிரிவின் படி காணக்காய்வாளர் அதிபதி, பாராளுமன்றத்திற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவர் அரசாங்கத்தின் திறைசேரிப் பணம் செலவிடுவதை அவர் கண்காணிக்க வேண்டும்.

பாராளுமன்றத்தின்பொதுக் கணக்றிக்கைகள் குழு, சில கட்டுப்பாடுகளை விதிக்கலாம். அமைச்சரவை சில திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கும்போது. திறைசேரியின் பங்குபற்றலும் அவசிய மாகின்றது.

ஆனால், உத்தேச செயலணியானது இவற்றுக்கு கட்டுப்பட்டதாக அமைந்து செயற்படப் போவதாக தெரியவில்லை, அங்ஙனம் செயற்படுவதாயின் தற்போதுள்ள பல்வேறு சட்டங்களையும் நடைமுறை விதிகளையும் மீற வேண்டிவரும்.

சட்டத்திற்கு அமைவாக நடந்தால் எதிர்பார்க்கப்படும் விசேட அந்தஸ்த்தை இச்செயலணி இழந்துவிடும் அங்ஙனம் அன்றி மாறிநடந்தால் நீதிமன்றம் குறுக்கிட வேண்டி ஏற்படும்இந்தத்தர்மசங்கட நிலையில் இருந்து கூட்டு செயலணி எப்படி வெற்றிகரமாக மீண்டும் தலை தூக்கப்போகிறது என்பது இன்னும் ஓர், இரு வாரங்களில் தெரியவந்து விடும். (உ-7)

---

## விவசாய உள்ளீடுகள்

(ஈச்சமோட்டை)

யாழ் கியூடெக் நிறுவனத்தினரால்ஈ.சி எச்.ஓ.(எக்கோ) நிறுவன அனுசரணையுடன் இளவாலைப்பகுதி விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் அண்மையில் வழங்கப்பட்டன.

இளவாலைப்பகுதியில் மீள் குடியமர்ந்த விவசாயிகள் தமது தொழிலை ஆரம்பிப்பதற்கான ஊக்குவிப்பாக இவை வழங்கப்பட்டன.

விதைநெல், வெங்காயம் போன்றவற்றுடன் மண்வெட்டி மற்றும்இதர உபகரணங்களும் இதில் அடங்கும்.

இவ் உதவித்திட்டத்தினால் மீள்குடியமர்ந்த அறுபது விவசாயிகள் பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-59)

## பல்கலைக்கு தெரிவானோர் பதியலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு விசேட அனுமதிமூலம் தெரிவுசெய்யப்பட்ட 209 பேரையும் பதிவுசெய்யும் நடவடிக்கை எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.09 மணி முதல் 12.00 மணிவரை பதிவாளர் அலுவலகத்தில் இடம் பெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட மாணவர்களை உரிய ஆவணங்களுடன் அன்றைய தினத்தில் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

## சமாதான ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

நவாலிப் பகுதிச் சிறுவர்களுக்கான சமாதான ஒன்றுகூடலும், கருத்தரங்கும் இன்று காலை 9.00 மணிக்கு நாவலிதிருஇருதய ஆண்டவர் ஆலயத்தில் கியூடெக்கின் சமாதானக் குழுவினரினால் நடாத்தப்படவுள்ளது (உ-6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நவாலி மற்றும் அளவெட்டிப் பகுதிகளில் சமாதானக் குழு அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் கியூடெக் சமாதான குழுவினால் நடத்தப்படவுள்ளது. (உ-6)

## கந்தசஷ்டி இசைப் பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில், எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 10 ஆம்திகதி வரையான கந்தசஷ்டி விழாக் காலத்தில் தினமும் மாலை 5 மணிக்கு முதல் 6 மணி வரை 'முருகன் பெருமை' என்றபொருளில் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (உ)

---

# வடக்கு - கிழக்கு நிர்வாகம் தொடர்பாக

# முரண்பாடாகப் பேசுகிறார் ஜனாதிபதி

## மஹ்ரூப் எம். பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க முரண்பாடான நிர்வாக அலகு முறைகளை வெளியிட்டுள்ளார் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்றஉறுப்பினர்எம். மஹ்ருப்தெரிவித்துள்ளார்.

இது பற்றி மேலும் அவர் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் சமர்பித்து தனது புதிய அரசியல்யாப்பில் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு ஒரே நிர்வாக அலகை அமைப்பதற்கு ஆலோசனை தெரிவித்திருந்த போதிலும் தற்போது வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கே தனியான முஸ்லிம அலகொன்று அவசியமெனக் கூறுவதன் நோக்கம் மக்களுக்கு விளங்கவில்லை.

கிழக்கு மாகாணத்துக்கு தனியான முஸ்லிம் அலகொன்று அவசிய மெனக் கடந்த 29ஆம் திகதி ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் ஊடங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இதுஜனாதிபதியின் உத்தியோக பூர்வக் கருத்தாகும். ஆனால் ஜனாதிபதி கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட புதிய அரசியல் யாப்பில் வடக்கு-கிழக்கு, மாகாணங்களுக்கு ஒரே நிர்வாக அலகு அமைக்கவே ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கை ஒன்றிணைத்து அவரால் முன் வைக்கப்பட்ட ஒரே அலகுதொடர்பான மக்கள் கருத்தை அறிய 10ஆண்டுகளுக்குள் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவும் ஆலோசனை தெரிவிக்கப்டிருந்தது.

அவரது இந்தஅரசியில்யாப்பினுள் மட்டுமல்ல இது தொடர்பாக அவர் சமர்பித்த சகல ஆவணங்களிலும் ஆற்றிய உரைகளிலும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஒரு நிர்வாக அலகை அமைப்பதாகவே குறிப்பிடப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்குஒரு நிர்வாகஅலகேஅவசியமென ஆலோசனைதெரிவித்த ஜனாதிபதிஇப்போது தனது ஊடகப் பேச்சாளர் மூலமாக தனியான முஸ்லிம் அலகொன்று அவசியமெனக் கூறுவது ஏன் என்பது மக்களுக்கு விளங்காத ஒன்றாகவேயுள்ளது என்றுதெரிவித்தார். (உ-7)

# மொராக்கோ சிறைச் சாலையில் தீ அனர்த்தம், 49 கைதிகள் பலி

(நாபிட்)

மொராக்கோவிலுள்ள சிறைச்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் அங்கிருந்த 49 கைதிகள் உயிரிழந்ததுடன், 40 பேர் எரிகாயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

எரிகாயங்களுக்கு உள்ளான வர்களில்8 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத் தீ விபத்துக்கான காரணத்தை கண்டறிவதில் அந் நாட்டுப் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தலைநகர் ரவாட்டில் இருந்து 170 கிலோமீற்றர் தொலைவிலுள்ள சிறைச்சாலையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சிறைச்சாலையில் மொத்தமாக ஆயிரத்து 313 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

இதேவேளை, சிறைச் சாலையில் பற்றிய தீயை அணைப்பதில் தீயணைப்புப் படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகவும், பாதுகாப்புக்கருதி ஒரு பகுதி கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டு வருவதாகவும் அந் நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சு-2)

## அமெரிக்காவிடமிருந்து

# நாசகாரிக் கப்பல்கள் தாய்வானால் கொள்வனவு

(தைபீ)

அமெரிக்காவிடமுள்ள 23 வருடங்கள் பழமை வாய்ந்த கீடிற் ரக நாசகாரிக் கப்பல் நான்கினைத் தாய்வான் கொள்வனவு செய்யவுள்ளது.

மேற்படி 4 நாசகாரிக் கப்பல்களையும், கொள்வனவு செய்வதற்கு 811 மில்லியன் டொலர் தேவைஎன மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியைத் தாய்வான் பாராளுமன்றம் வழங்கியுள்ளது.

இக்கப்பல்களின் கொள்வனவு மிகவிரைவில் இடம்பெறும் என தாய்வான் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (சு-2)

# தமிழகத்திற்கு காவிரி நீரை வழங்க உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவு


## கர்நாடக முதல்வருக்கு பிறப்பித்தது

(சென்னை)

நவம்பர் மாதம் 6ம் திகதி நள்ளிரவு வரை ஒரு நாளைக்கு ஒன்ப தாயிரம் கன அடி என்ற வீதத்தில் காவிரி நதி நீரை தமிழ் நாட்டிற்கு தொடர்ந்து திறந்து விடும்படி உச்ச நீதிமன்றம் கர்நாடக அரசிற்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

உச்ச நீதிமன்றமும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான காவிரி நதி நீர் ஆணையமும் பிறப்பித்த உத்தரவுகளை நிறைவேற்றத் தவறியதன் மூலம கர்நாடக முதல்வர் நீதிமன்ற அவமதிப்புக் குற்றம் இழைத்ததாக தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகளை தொடர்ந்திருந்தது.

இவ் விசாரணைகளின் முடிவில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு இந்த உத்தரவை பிறப்பித்தது. (ந-5)



பருத்தித்துறை ப.நோ.கூ.சங்க கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்

# மூன்றாம் ஆண்டு நினைவு நாள்



வீர வேங்கை

லெப்.கேணல் இராகவன்



வீர வேங்கை

லெப் .கேணல். நியூட்டன (இளையவன்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் மரபு வழித் தாக்குதல் படையணியான சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியான லெப்.கேணல் ராகவன், தளபதியான லெப்.கேணல் நியு,ட்டன் ஆகியவர்கள், இம் மண்ணை முத்தமிட்ட எதிரியின் வன்னி ஆக்கிரமிப்புச் சமரான ஜெயசிக்குறு சமர்க்களத்தின், எதிர்ச் சமரான ஓயாத அலைகள் 3ல் எதிரியைப் புறமுதுகிட வைத்த ஆரம்ப சமர்க்களத்தில் 02.11.1999 அன்று முதற் களப்பலியாகிய லெப்.கேணல் ராகவன், லெப்.கேணல் நியு,ட்டன் ஆகியவர்களை இந் நாளில் நினைவு கூருவதுடன் இவ் வெற்றிச் சமரில் பொங்கி எழுந்து வீரக் களமாடி வீரகாவியமான அனைத்து மாவீரர்களையும்.இந் நாளில் நினைவு கூருகின்றோம்.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்.

## உலக தரிசனம்

### பயங்கரவாத பட்டியலில் மேலும் 4 அமைப்புக்கள்

(லண்டன்)

பிரிட்டிஷ் அரசினால் தடை செய்யப்பட்டுள்ள பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் மேலும் நான்கு அமைப்புக்கள் சேர்க்கப்பட் டுள்ளன.

இந்தோனேசியப் பாலித் தீவில இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்கு காரணமானதெனக்கருதப்படும் ஜமா இஸ்லாமா இயக்கத்தின் பெயரும் இப் புதிய பட்டியலில் இடம்பெற்றுள்ள தெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

### இத்தாலியில் பூமிஅதிர்ச்சி 30பேர் உயிரிழப்பு

(ரோம்)

இத்தாலியின் தென் பகுதி நகரான சன்கியூலியானோ பகுதியில நேற்று முன்தினம் இடம்பெற்ற பூமியதிர்ச்சியில் 23 சிறுவர்கள் உட்பட 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

இப் பூமியதிர்ச்சி 5.4 றிச்ட்டர் அளவில் பதிவாகியுள்ளது. இச் சம்பவத்தில் பாடசாலை ஒன்றில் கல்வி பயின்று கொண்டிருந்த 6 வயதுச் சிறுவர்கள் பத்துப் பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தவர்களை மீட்கும் பணி தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

1977ஆம் ஆண்டிற்குப் பின்னர் அங்கு இடம் பெற்ற மிகப் பெரிய பூமியதிர்ச்சி இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இப் பூமியதிர்ச்சி யினால் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர். (த)

## அகத்திணை.....

கும் பயணித்தும்சில இடங்களில வாழ்ந்தும் பல்லின மக்களோடும் பலவகை அநுபவங்களோடும் இணைந்து கொண்டும் வாழ்ந்த பினனணி எனக்கு உண்டு.

ஆனால்.விசாவுக்கான நடவடிககைகளின் நெளிவு சுளிவுகளோ பயண ஒழுங்குகளோ செய்யக் கூடிய துணிவும் திறமும் நான் பெற்றிருக்கவில்லை.

நான் தங்கியிருந்த வீட்டவரான என்மருமகன் சிவகுமாரன் (இலங்கை மத்திய வங்கியிலே புள்ளியியலாளராய்ப் பணிபுரிந்து இளைப்பாறியவா)பேரன் சிவப்பிரகாஷ்(இலங்கை விமானப் பயண சேவையில் பணி புரிபவர். வித்துவான் பொன் முத்துக்குமாருவின பேரன். சம்மந்த வழியால் எனக்கும் பேரன்) ஆகியோரின் ஆபத்பாந்தவ உதவிகளும் பண்பாளரும் தன்னலமற்ற தொண்டருமான திருவாளர் தர்மராஜா அவாகளின் பக்கபலமும் ஒன்று சேர்ந்து இரண்டொரு நாள்களிலேயே விசா பெற்று, பயண ஒழுங்கையும் சீர்செய்து கொள்ளக்கூடிய சாதக நிலையை உருவாக்கின.

25-06-2002 அன்று அதிகாலை 6.00மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து இலங்கை விமான சேவை விமானத்தில் லண்டன் பயணமானேன்.

(வளரும்)

# இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சராக ராகுல் மொஹால் நியமனம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் முன்னாள் இராணுவத் தளபதி ராகுல் மொஹாலை அந் நாட்டின் பாதுகாப்பு அமைச்சராக பிரதம மந்திரி எரியல்ஷரோன் நியமித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்து வந்த தொழிற் கட்சி அங்கத் தவரான பென் எலையேஸ் பதவி விலகியதை யடுத்தே இப் புதிய நியமனம் இடம் பெற்றுள்ளது.

மேற்குக் கரையோரப் பகுதி மற் றும் ஹாஸாவிலுள்ள யூதக் குடியேற் றங்களுக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பாக எழுந்த பிரச்சினை காரணமாக ஆளும் கட்சியில் அங்கம் வகித்த தொழிற் கட்சி உறுப்பினர்கள் இருவர் பதவி விலகியதும், இதனால் எரியல்ஷரோன் தலைமையிலான கூட்டணி அரசு ஆட்டம் கண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (சு-4)

## தமிழ் நாட்டில்

# கட்டாய மத மாறறத் தடைச்சட்டம் சட்டப் பேரவையில் நிறைவேறியது

(புதுடில்லி)

கட்டாய மத மாற்றச் சட்டம் நேற்று முன்தினம் 16 வாக்குகள் வீத்தியா சத்தில் தமிழ் நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப் பட்டது.

கட்டாய மத மாற்றச் சட்டம் குறித்து வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற இச் சட்ட அதிருப்பதியாளர்களின் வற்புறுத்தலின் பேரில், நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 16 மேலதிக வாக்குகளால் நிறை வேற்றப்பட்டது.

இதனை அமுலுக்குக் கொணடு வந்த முதலமைச்சர் ஜெயலலிதா இது, எந்த மதத்திற்கும் எதிரான சட்டம் அல்ல என்றும் கட்டாயத்தின் பேரிலும் ஆசை காட்டி மற்றும் மோசடிகள் செய்து மத மாற்றத்தில் ஈடுபடுத்து பவர்களுக்கு மாத்திரமே இச் சட்டம் உரியது என்றும், தமாகவே மதம் மாறுபவர்கள மீது இச் சட்டம் பிரயோகிக்கப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார். (சு-2)



திருநெல்வேலி முடமாவடி ஞானக்குழந்தை பாலர் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவியொருவருக்கு ஆசிரியர் மகேஸ்வரன் பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்.



யாழ் வலய மட்டத்தில் நடை பெற்ற உதை பந்தாட்டப் போட்டியில் சென்.ஜேம்ஸ் வித்தியாலய அணியை வெற்றி கொண்ட உரும்பிராய் இந்துக் கல்லூரியின் உதைபந்தாட்ட வீரர்கள், கல்லூரி முதல்வர் அ.ஈஸ்வரநாதன், பயிற்றுவிப்பாளர் ம.வினோகாந் ஆகியோருடன் இருப்பதை படத்தில் காணலாம்.



வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அடியார்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட கண்ணன் இல்லத் திறப்பு விழா.அண்மையில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் அவர்களால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுவதையும் அருகில் அவரது துணைவியாா நிற்பதையும் படத்தில் காணலாம். படம்: சந்திரமோகன்

# இன்று ஒரு தகவல்

## நினைவாற்றல் வளரட்டும்

கடன் கொடுத்துவிட்டு அதை மறக்காமல் நினைத்துக் கொண்டுஇருப்பது சகஜம், கடன்வாங்கிக்கொண்டு அதை அப்பொழுதே மறந்துவிடுவதும் இந்த உலகத்தில் மிகவும் சகஜம், போனமாதம் பத்து ரூபா கொடுத்தேனே அதை வாங்கிக்கொண்டு போகலாமென்று வந்தேன் என்பான் ஒருவன்; வந்தவனைப் பார்த்து 'நீ யார்' என்று கேட்பான் இவன்: வந்தவனையே ஞாபகம் இல்லையென்கிறபொழுது, வாங்கிய பணமா ஞாபகம் இருக்கப் போகிறது.

தனக்கு வேண்டாதது-மனதுக்குக் கசப்பானது இதை, மனிதன் மறந்துவிடுகிறானாம்; உளவியல் அறிஞர்கள் நினைவாற்றலை இரண்டுவிதமாகப் பிரிக்கிறார்கள்; குறுகியகாலநினைவு, நீண்டகால நினைவு நாம் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டியதன் அவசியத்தைப் பொறுத்தும் நோக்கத்தைப் பொறுத்தும் அதை இப்படிப் பிரிக்கிறார்கள். இன்றைக்குப் பத்திரிகையில் நமது இராசிபலன் என்னஎன்று பார்க்கிறோம். இதைநமது வாழ்நாள்முழுவதும் ஞாபகம் வைத்திருக்கவேண்டும் என்கின்ற அவசியம்இல்லை: ஒரு திருக்குறள் படிக்கிறோம். அது நமக்கு எப்போதும் ஞாபகம்இருக்கவேண்டும்;

பாடம்படிக்கிற சமயத்தில் ஞாபகசக்தி மிகவும் அவசியம் நினைவாற்றல் என்பது நாம் கற்கக்கூடிய தன்மையைப் பொறுத்தது என்று சொல்கிறார்கள். இதை வளர்த்துக் கொள்வதற்குச் சிலவழிமுறைகள் உண்டு. முதலில்-படிப்பதற்கான ஆர்வம்வேண்டும். வேண்டாவெறுப்பாகப்போய் உட்கார்ந்தால் என்னவாகும்? படிப்பதையும் கேட்பதையும் நன்றாக மனத்தில் வாங்கிக் கொள்ளவேண்டும் என்கின்ற ஆர்வம் இருக்கவேண்டும் கவனத்தை வேறுவகையில் சிதறவிடக்கூடாது.ஒருமுகப்படுத்த வேண்டும்: படிக்கிற பாடத்தை மனதிற்குள்ளே பாடமாக்கிப் பார்க்கவேண்டும். அதற்குக் கற்பனையைப் பயன்படுத்தவேண்டும்: அதனால்தான் படத்தோடு பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள்;

படிக்கிற செய்தியை மற்றவகைச்செய்தியோடுதொடர்புபடுத்திப் படிக்க வேண்டும், நமக்குத் தெரிந்த மற்றப் பொருளோடு இணைத்துப் பார்க்கவேண்டும்,நயத்தோடு பயிலவேண்டும், இசையோடு பயில வேண்டும், வெகுகாலம் நினைவுவைத்திருப்பதற்கு இது நல்லவழி. சின்னப் பிள்ளைகள் வாய்ப்பாடு கற்றுக்கொள்கிறமுறையை யோசித்துப் பாருங்கள். அதுமாதிரி நாம்என்னபடிக்கிறோமோ அதைப்பிரித்து பொருள் தெரிந்து படிக்க வேண்டும். அர்த்தம் தெரியாமல் நெட்டுருப்போடுவது அதிக நாளைக்குத் தங்காது. கூடுமான வரையும் திரும்பத்திரும்பச் சொல்லிப் பார்த்துக் கொள்வதும் நல்லது, படித்ததை மனக்கண் முன் கொண்டுவர வேண்டும் படித்த பின்னர் புத்தகத்தை மூடிவைத்துவிட்டு திரும்பச் சொல்லிப்பார்க்க வேண்டும். படித்த பின்னர்தான் ஓய்வு அல்லது உறக்கம் மிகவும் நல்லது,படித்தபின்னர்தான் தூக்கம் வர வேண்டும், படிக்கிறபோது தூக்கம் வந்தால் இது நல்லதில்லை, படித்தபின்னர் கடினமான வேலையில் ஈடுபடுவதும் நல்லதல்ல;

ஒரு புத்தகத்தை அல்லது பாடத்தைப் படிப்பதற்கு முன் அதனுடைய உட்பொருளை அல்லது கருத்தை தெரிந்துகொண்டு படிப்பது நல்லது. பொதுவாக திரும்பத் திரும்பப் படிப்பது ஞாபக சக்தியை வளர்ப்பதற்கு ஒரு சிறந்த வழி. அதனால் நினைவாற்றலை வளர்ப்பதற்கு தேவை ஆர்வம், ஊக்கம், மன உறுதி. படிக்கிற காலத்திலேயே இந்தப் பழக்கம் வந்துவிட்டால் பின்னர் மிகவும் உதவியாக இருக்கும்.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். தலைவர்களாகி விட்டால் நிறையப் புள்ளிவிபரங்கள் சொல்ல வேண்டியிருக்கும்: ஞாபக சக்தி இல்லை என்றால் எப்படிச் சொல்வது? ஜெனரல் ஸ்மட்ஸ் என்றுஒருவர். தென்னாபிரிக்காவில் பிரதமராக இருந்தார்; பாராளுமன்றத்தில் பேசுவதற்கு அவருக்குப் புள்ளிவிபரம் தேவைப்பட்டது. மறுநாளே அதுபற்றிப் பேசியாக வேண்டும். செயலாளரைக் கூப்பிட்டார். 'இதோபாருங்கள். நாளைக்கு இந்தப் புள்ளிவிபரங்கள் எனக்குத் தேவை. இதை வைத்துத்தான் எதிர்க்கட்சிகளைத் திணற அடிக்க வேண்டும்' என்றார்;

செயலாளர் திகைத்துப் போய் விட்டார்; 'சார்! இந்தப் புள்ளிவிபரங்களைச் சேகரிப்பதற்குக் குறைந்தது ஐந்து வருஷங்கள் ஆகும்' என்றார் 'அதெல்லாம் எனக்குத் தெரியாது...நீங்கள் என்ன செய்வீர்களோ ஏது செய்வீர்களோ...நாளைக்கு எனக்குப் புள்ளிவிபரம் கொடுக்கிறீர்கள்!' என்றுவிட்டார் ஸ்மட்ஸ், ஆனால் அவரால் ஒன்றும் முடியவில்லை. மறுநாள் பாராளுமன்றம் கூடியது; புள்ளிவிபரங்களை அள்ளி வீசி எல்லோரையும் ஆச்சரியப்படவைத்தார் ஸ்மட்ஸ்;

பேச்சு முடிந்ததும் செயலாளர் ஓடிவந்தார். 'எப்படி சார் இது? இவ்வளவு புள்ளி விபரங்களை ஒரே இரவில் எப்படி சேகரித்தீர்கள்? ஆச்சரியமாக இருக்கிறதே' என்றார். ஸ்மட்ஸ் சிரித்துக் கொண்டே சொன்னார்: 'இந்த விபரங்களைச் சேகரிக்க அரசாங்கத்துக்கே ஐந்து வருடங்கள் ஆகும் என்று சொன்னீர்கள், அப்படியென்றால் இவை உண்மைதானா என்று கண்டுபிடிக்க எதிர்க்கட்சிகளுக்கு பதினைந்து வருஷங்கள் ஆகும். அவர்கள் கண்டுபிடித்து என்னை மடக்குவதற்குள்ளே நான் நிச்சயமாக இந்தப்பதவியிலே இருக்கப் போவதில்லை; அதுதான் அடித்துச் சொல்லிவிட்டேன்' என்றாராம்;

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# 10 இலட்சம் ஒதுக்கு

ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்டதன் பின்னர், வன்னியில் இருந்து மீளவும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் குடியமர்ந்த குடும்பங்களிற்கு 65 ஆயிரம் ரூபா மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கவென 10 இலட்சம ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(உ)

# மாணவர்களுக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொஸ்கோ வித்தியாலயத்தில் இருந்து இவ் வருடம் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

(உ)

# மதகுருமார் சிலர் சமாதானம் குறித்து மாறுகருத்தை பரப்பி வருகின்றனர்

## சௌமியஇளைஞர்நிதியதலைவர்வேதனை

(தென்மராட்சி)

நாட்டில் ஏற்படவுள்ள சமாதானத்தினை பேணிக் காக்க வேண்டிய பொறுப்பு நாட்டுமக்கள் அனைவருக்கும் உண்டு. இதுவிடயத்தில் நாம் மிகவும் விழிப்புடன் செயல்பட வேண்டும்; ஆயினும், யாழ் குடாநாட்டில் இருக்கும் முக்கிய மதவழிபாட்டு நிலையத்தின் பொறுப்பு வாய்ந்த சிலர் சமாதானம்பற்றிய தீய கருத்துக்களைப் பரப்பிவருகின்றமை வேதனை தருவதாகவுள்ளது.

எட்டியாந்தோட்டையிலுள்ள சௌமிய இளைஞர் நிதியத்தின் தலைவரும், வடக்கு,தெற்கு சமாதான பரிமாற்றத்திட்டத்தின் அமைப்பாளருமான எம்; அந்தோனி முத்து நேற்று முன்தினம் யாழ்; சுண்டுக்குளியிலுள்ள பஸ்தியன் றெஸ்ட்கன்னில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்:

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், சௌமிய இளைஞர் நிதியம் - நாட்டிலுள்ள கிராமிய மட்ட மக்கள் மத்தியில் சமாதானத்தின் முக்கியத்துவம் பற்றியும்,வடபகுதி மக்கள் கடந்த 20 வருடகாலமாக அனுபவித்து வரும் துன்பங்கள் பற்றியும் எடுத்துக் கூறிவருகின்றது.

நேற்று முன்தினம் வடபகுதியில் உள்ள பௌத்த மதவழிபாட்டுத் தலத்துக்கு நான் சென்றிருந்த சமயம், அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் குறிப்பிட்ட மதகுரு, அரசின் சமாதான முயற்சிகள் பற்றிய விமர்சனங்களை கூறியிருந்தார்; இது இன்றைய நிலையில் அரசினதும் - தமிழீழ விடுதலைப் புலிகளினதும் சமாதான முயற்சிகளைக் குழப்பும் முயற்சியாகவே கருதப்படுகின்றது.

இதுபற்றி புலிகளின் யாழ்; மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி: இளம்பரிதியிடமும் யாழ்; மாவட்ட அரச அதிபர் செ; பத்மநாதனிடமும் எனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளேன் என்று குறிப்பிட்டார்.

சமாதான முயற்சிகள் வெற்றியடைய வேண்டுமென்பதை வலியுறுத்தி சௌமிய இளைஞர் நிதியம் கொழும்பு, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா,மலையகம் போன்ற இடங்களில் சர்வமத பிரார்த்தனைகளையும், தியான நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(உ-77)

# யுத்தத்தின் மத்தியிலும் கல்வியில்பல சாதனைகளை குடாநாடு ஈட்டியுள்ளது

## வேலாயுதம் எம்.பி. பாராட்டு

(மந்திகை)

யாழ்; குடாநாட்டில் மாணவர்கள் எதிர்நோக்கும் துன்ப துயரங்களை தென்னிலங்கையில் உள்ள ஊடகவியலாளர்களிற்கு எடுத்துக் கூறவுள்ளோம் என,

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே; வேலாயுதம் தெரிவித்தார்:

வடக்கிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட கல்வியாளர் குழுவுக்கு தலைமை தாங்கி வந்த இவர் அண்மையில் நெல்லியடி மகாவித்தியாலயத்தில் அதிபர் ஆசிரியர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்;

பாடசாலை அதிபர் சேதுராஜா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் அவர் தொடர்ந்து பேசுகையில்;

கடந்த 20 ஆண்டுகளின் பின் வடபகுதியைத் தரிசித்தமையை இட்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்குள்ள நிலைமைகளை பற்றி குறிப்பாக மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி தென்னிலங்கை சிங்கள மக்களிற்கு தெரிவிக்கவுள்ளோம்.

கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் யுத்தம் நடைபெற்று கொண்டிருந்த போதிலும் யாழ்ப்பாணத்தில் கல்வியில் பல்வேறு சாதனைகள் ஈட்டப்பட்டுள்ளன. இது பாராட்டிற்கு உரியது என்றார்;

(உ-23)

# ஸ்கந்தாவில் இன்று பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் நிறுவுநர் நினைவுநாளும்பரிசளிப்புவிழாவும் இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலை ஒறேற்றர் மண்டபத்தில் அதிபர் க; சிவாஜிதலைமையில் இடம் பெறவுள்ளது;

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணனித்துறைத் தலைவர் கலாநிதி ச. மகேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசியுரையை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதிதங்கம்மாஅப்பாக்குட்டியும் நிறுவுநர்நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழகஉயிரியல் இரசாயனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் காலநிதி பொ.நவரட்ணமும் நிகழ்த்தவுள்ளனர்,

(உ)

# குடும்பாபிஷேக மலர் வெளியீடு

(மந்திகை)

அல்வாய் சாமணத்துறை ஆலடிப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேக மலர் வெளியீடு இன்று பி.ப.3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் பரிபாலன சபைத் தலைவர் ச; தர்மரத்தினம்தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை தி.சோமஸ்கந்தராஜக் குருக்களும் வாழ்த்துரையினை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா ஆகியோரும்,

வெளியீட்டுரையினையாழ்; பிராந்திய ஆணையாளர் க.குணராசாவும் மதிப்பீட்டுரையினை பலாலி ஆசிரியர் கலாசாலைமுன்னாள் அதிபர் சோ; பத்மநாதனும் நிகழ்த்தவுள்ளனர்.

(உ-28)

# மட்டு மாவட்டத்தில் நீதித்துறை, காவல்துறை மீண்டும் செயற்படும்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின்கட்டுப்பாட்டில்உள்ளமட்டக்களப்பு பிரதேசத்தில் நீதித்துறை,காவல்துறை என்பன மீண்டும் இயங்கவுள்ளதாக மட்டு- அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

இந்தத்துறைகளுக்கான அலுவலகம் எதிர்வரும் 5ஆம் திகதி பழுகாமத்தில்திறந்து வைக்கப்படவுள்ளது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ காவல்துறை,நீதிமன்றம் என்பன கடந்த 4வருடங்களுக்கு முன்னர் இயங்கி வந்தன.

1998ஆம்ஆண்டு காலப்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இடைநிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(உ-8)

# சமாதான செயலகத்திற்கு முஸ்லிம் குழு ஆலோசனை

(கொழும்பு)

நெருக்கடிக்குத் தீர்வு காணும் பேச்சுக்களை கடந்த வியாழனன்று நடத்திய பிரதமர் ரணில் விக்கிரசிங்கவும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ராவூப் ஹக்கீமும், முஸ்லிம்கள் விவகாரங்கள் தொடர்பாக சமாதான செயலகத்திற்கு ஆலோசனை வழங்கும் குழுவொன்றை ஏற்படுத்துவதென்று தீர்மானித்துள்ளனர்;

வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் அதிகாரப் பரவலாக்கல் நடவடிக்கைகள், புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகள் பற்றி திட்டமிடப்படும்போது மேற்படி குழுவுக்கு தலைமை தாங்கும் ஹக்கீமின் ஆலோசனைகளை சமாதான செயலகம் பெற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, வடக்கு-கிழக்கின் உலாமா சபை கடந்த திங்களன்று காத்தான்குடியில் நடத்திய கூட்டத்தில் ராவூப்ஹக்கீமின் கரங்களைப் பலப்படுத்துவதென்று ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

(இ)

# மேசைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் நடத்தப்படும், திறந்த மேசைப் பந்தாட்டம் இன்று காலை 9.00 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது;

(உ)

# கலந்துரையாடல்

(தென்மராட்சி)

தற்போது லண்டனில் வாழ்பவரும் ''தேசம்'' சஞ்சிகையின் பணிப்பாளர்சபை உறுப்பினருமான என். செல்வராஜா இலங்கை எழுத்தாளர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இக்கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00மணிக்கு நல்லூர் ஆதீன கலாமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

(உ- 77)

# மனித வாழ்விற்கே அச்சுறுத்தலாக விளங்கிடும்

# 'எயிட்ஸ்' நோய் பற்றிய விழிப்புணர்வு அவசியம்

இன்று உலகம் முழுவதையுமே கிலிகொள்ளவைக்கும் நோயாகஎயிட்ஸ் (AIDS) உருவெடுத்திருப்பது அனைவரும் அறிந்ததே.

தனிமனிதனை அணுவணுவாகச் சாகடித்து சமூக, பொருளாதார கட்டமைப்டைச் சிதைத்து மனிதனது இருப்புக்கே அச்சுறுத்தலாகியுள்ள இந்தநோய் குறித்து சரியான விழிப்புணர்வு பெற வேண்டிய தேவை அனைவருக்கு முண்டு.

எனவே இந்தஉயிர்கொல்லி நோய் பற்றிய பூரண அறிவைப் பெற்று நாம் விழிப்புணர்வு பெறுவதால் எமக்கு இந்தநோய் தொற்றாமலும் தொற்றுள்ளவர்களிடமிருந்து ஏனையவர்களுக்கு பரவாமலும் தடுப்பதுடன் நோயாளியை மனிதாபிமானத்துடன் பராமரிக்கவும்உதவியாக இருக்கும்.

## எயிட்ஸ் என்றால் என்ன?

எயிட்ஸ் என்பது ஆங்கிலத்தில் (AIDS) எனும் சொற்களின் கூட்டமைப்பு பெயர்: இதை (AcqciredImmuneDefi Ciency Synrdome) நிர்ப்பீடன குறைபாட்டால் பெற்ற நோய்களின் கூட்டு என அழைப்பர்.

எமது உடல் இயற்கையாகவே நோய்கள் தொற்றும் போது அதை எதிர்த்துப் போராடி வெற்றிகாணும் ஆற்றலை கொண்டிருக்கும். இதைநிர்ப்பீடன சக்தி என அழைப்பர். நிர்ப்பீடன சக்தியானது குருதியிலுள்ள வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் மூலம் எமக்குகிடைக்கிறது குறிப்பாக அதிலுள்ள T4 எனப்படும் நிணநீர்க் குழியங்களே எமதுஉடலின் நோய் எதிர்ப்புசக்தியைகொண்டிருக்கும்

எயிட்ல் எனப்படும்நோயினதுகாரணி ஒரு வைரஸ்வகையைச்சேர்ந்தது இந்தவைரசை HIV(Haman Immnue deficiency Virus) என அழைப்பர். HIV வைரசானதுதொற்றிகுருதியை அடைந்து அங்கு எமது நிர்ப்பீடன சக்தியைவழங்கும் T 4 வகை நிணநீர்க்குழியங்களை படிப்படியாக அழிக்கத் தொடங்குவதால்எமது உடல் நோய் எதிர்ப்பு சக்தியை இழக்கும். இதனால் பல்வேறு நோய்களும் எமக்கு இலகுவாக ஏற்பட்டு உடல் வலுவிழந்து மரணம் சம்பவிக்கும்

## எயிட்ஸ்எவ்வாறு ஏற்படுகின்றது?

எயிட்ஸ் ஆனது HIV தொற்றுடைய ஒருவரிடமிருந்தே இன்னொருவருக்கு பாலியல், குருதித் தொடர்புகளூடாகக் கடத்தப்பட்டு தொற்றுதலடைகின்றது.

HIV வைரஸ்தொற்றுடைய ஒருவருடன் ஆண், பெண்பாலியல் தொடர்பில் ஈடுபடும் போது, இந்த நோய் ஏற்படும் சாத்தியம் 98% வரை உள்ளது. அதாவது பாலிய உறுப்புகளிலிருந்து கசியும் திரவங்களிலே தொற்றுதலுக்கு போதுமான HIV வைரஸ் காணப்படும். இது பாலியல் உறுப்புகளினூடாகவோ, அங்கு ஏற்படும் காயங்களூடாகவோ மிக இலகுவாக தொற்றுதலடைகின்றது.

அடுத்து குருதிமாற்றீடு செய்யும்போது வைத்தியசாலைகளில் HIVக்கு பரிசோதிக்காமல் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளில் HIV உடைய ஒருவரது குருதி அந் நோயால் பாதிக்கப் படாதவரை அடையும்வாய்ப்புண்டு. அத்துடன் வைத்திய சாலைகளில் சிகிச்சைகளுக்காகப் பயன்படுத்தும் ஊசிகள், அறுவைச் சிகிச்சை கத்திகள் போன்றவை HIV தொற்றுடைய ஒருவருக்கு பாவித்த பின் தவறுதலாக தொற்று இல்லாதவருக்கு பாவிக்கும் போது நோய்க்கிருமி தொற்றும் வாய்ப்பு உள்ளது.

இதைவிட அழமாக முத்தமிடுதல், காயங்களுடன் நோயாளியின்குருதிதொடர்புபடுதல் போன்றவற்றின் மூலம் HIV தொற்றுடைய ஒருவரிடமிருந்து தொற்றற்றவருக்கு இக்கிருமி செல்லும் வாய்ப்புகள் உண்டு.

அடுத்ததாக HIV தொற்றுடைய தாய் கர்ப்பம் தரித்து குழந்தையைப் பெறும்போது அக்குழந்தைக்கு HIV தொற்றும் வாய்ப்புக்கள் உண்டு. மேலும் தாய்ப்பாலூட்டும் போதும் நோயுடைய தாயின் பாலுடன் வரும் HIV குழந்தையை அடையும் வாய்ப்புண்டு.

## எயிட்ஸை இனங்காணல்

ஒருவருக்கு HIV தொற்றி ஏறத்தாழ இரண்டு மாதங்களின் பின்பே குருதிச் சோதனை மூலம் இதன் தொற்றை உறுதிசெய்ய முடிகின்றது.

**ஆ. ஜென்சன் றொனால்ட்**

இவ்வாறு HIV தொற்று ஏற்பட்ட வளர்ந்தோரில் 8 முதல் 12 ஆண்டுகளுக்குப் பின்னும், குழந்தைகளில் 2 முதல் 5 ஆண்டுகளின் பின்பும் நோய்க்கான பாதிப்புகள் தென்படத் தொடங்கும்.

இவ்வாறு நோய் அறிகுறிகள் தென்படுவதற்கு முன்னைய நிலையை HIV+ve (எச் ஐ வி பொசிட்டிவ்) என அழைப்பர். நோய் நிலைமைகள் தெளிவாகதென்படும் போதே AIDS (எயிட்ஸ்) நோயாளி என அழைக்கப் படுவர்.

இதன் ஆரம்ப அறிகுறிகளாக பின்வருவன காணப் படும்.

- தொடர்ச்சியான காய்ச்சல். (1 மாதம் வரை)
- காரணமற்ற வயிற்றோட்டம்.
- உடல் நிறை வேகமான இழப்பு. (மாதத்திற்கு 10%)
- தொடர்ச்சியான இருமல்.
- இரவில் அதிக வியர்வை வெளியேறல்.
- ஆங்காங்கே நெறிகள் உருவாதல்.
- பசியின்மை.
- தலைமுடி உதிர்தல்.

போன்றவற்றைக் குறிப்பிடலாம். நோய் முற்றி இறுதியான நிலையில் பின் வரும் குணங்குறிகள் தென் படும்.

- கடுங்காய்ச்சல்.
- சத்தி (வாந்தி).
- உணவை விழுங்க முடியாமை.
- சுவாசிப்பதற்கு சிரமம்.
- உணர்வற்ற நிலை. (கோமா)
- கண்கள் குழி விழுந்திருத்தல்.

போன்றவை காணப்பட்டு நோயாளி மரணத்தைத் தழுவிக் கொள்வார்.

## வருமுன் காப்பது எப்படி?

எயிட்ஸ் என்னும் இக் கொடிய நோய் எமக்குத் தொற்றாது தடுப்பதற்கு விழிப்புணர்வு ஒன்றே மிக மிக அவசியமாகின்றது. இதற்கு நாம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

- HIV தொற்று உடையவர்களுடன் உடலுறவில் ஈடுபடுவதைத் தவிர்த்தல், இங்கு HIV தொற்று உடையவரா இல்லையா என இனங்காண்பது சிரமமாக இருக்கும் போது ஆணுறை, பெண்ணுறை போன்றவற்றை அணிந்து பாதுகாப்பான உடலுறவில் ஈடுபடல், இதைவிட எமது கலாசாரத்துக்கு பொருத்தமான ஒருவனுக்கு ஒருத்தி என்பதை கண்ணியமாகக் கடைப்பிடித்தல்.

அதாவது ஒருவர் தனது வாழ்நாளில் தனது வாழ்க்கைத் துணை ஒருவருடன் மட்டும் உடலுறவில் ஈடுபடுவதை விடுத்து பலருடன் தொடர்பு கொள்வாரானால் அவர்களில் யாராவது HIV தொற்றுடையவர்கள் இருக்கும் வாய்ப்பு அமையும்போது இத்தொற்றுக்கு ஆளாகும் சாத்தியம் அதிகம். அதனுடன் இவ்வாறான பழக்கத்தால் தான் பெற்ற HIV யை வேறு ஆட்களுக்கும் உடலுறவின் மூலம் பரப்பும் சாத்தியமும் அதிகம்.

- குருதி மாற்றீடு செய்யும் போது HIVபரிசோதனை செய்யப்பட்ட குருதியையே பயன்படுத்துதல்.
- குருதியுடன் தொடர்புபடும் ஊசி, அறுவைச் சிகிச்சைக் கத்திகள் போன்ற வைத்தியசாலை உபகரணங்களை HIV தொற்று அற்றதாகப் பயன்படுத்துதல்.
- அங்க மாற்று சிகிச்சையின் போது HIV க்கு பரிசோதித்து இல்லை என்பதை உறுதி செய்தல்.
- HIV தொற்றுடைய ஒருவரது குருதியுடனான நேரடித் தொடர்புகளைத் தவிர்த்தல்.
- HIV தொற்றுடைய தாய் கர்ப்பம் தரிப்பதை தவிர்த்து நோய்த் தொற்றுடைய குழந்தை உருவாக்கத்தை தடுத்தல்.

## எயிட்ஸ் தொற்றாத நிலைகள்

எயிட்ஸ் நோயின் காரணியாகிய HIV ஆனது தொற்றிய ஒருவருடன் பாலியல், குருதித் தொடர்பற்ற விதத்தில் நெருக்கமாக பழகுவதன் மூலம் HIV தொற்றுவதில்லை. அவற்றுக்கு உதாரணமாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

- HIV தொற்றுடையவருடன் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணுதல்.
- அவருக்கு முத்தமிடுதல் (சாதாரணமுத்தம்).
- கைகுலுக்குதல்.
- HIV தொற்றுடையவரது ஆடைகளை அணிதல்.
- ஒரே வீட்டில் வசித்தல்.
- ஒரே அலுவலகத்தில் வேலை செய்தல்.

போன்ற நாளாந்த செயற்பாடுகளால் HIV ஆனது தொற்றுவதில்லை, எனினும் HIV தொற்றி எயிட்ஸ் அறிகுறி உடையவரிடத்தில் பல நோய்களின் சாட்டுக் காணப்படும்.

உதாரணமாக- தோல் புற்றுநோய், காசநோய், கோர்ப்பிஸ், கன்டிடியரஸ், மூளைக்காய்ச்சல்.

இதில் தொற்றும் தன்மை உடைய காசநோய், கேர்ப்பிஸ், கன்டிடியாஸ் போன்றவை தொற்றுவதை தவிர்க்கும் முகமாக நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

## நோயாளியைப் பராமரிப்பது எப்படி?

எயிட்ஸ் நோயால் பீடிக்கப் பட்டவர் மரணத்தை விரைவில் எதிர்நோக்க இருப்பது சர்வ நிச்சயம் எனினும் அவர் வாழும் ஆயுட்காலத்தை மிகச் சிறிதளவு கூட்டவும் அவர் வாழும் போது உளரீதியான தாக்கங்களுக்கு உள்ளாகாது தவிர்க்கவுமே நோயாளியின் பராமரிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

HIV வைரசால்ஏற்படும்இந் நோய்க்கு இதுவரை மருந்து எதுவுமே கண்டு பிடிக்கப்படவில்லை என்பதை யாவரும் தெளிவாக விளக்கிக்கொள்ள வேண்டும். எனினும் எய்ட்சோடு சம்பந்தப்பட்டு இணைந்துவரும் நோய்களைக் கட்டுப்படுத்த சில மருந்துகளை நோயாளி உட்கொள்வார். இதைவிட HIV ன் பெருக்கத்தை சற்று தாமதப்படுத்தும் மருந்துகள் சில உள்ள போதிலும் அவை மிக மிக செலவானதும் குறிப்பிடக் கூடியளவு பயன் அற்றதாகவுமிருப்பதால் அதனைப் பயன்படுத்துவதும் எல்லோருக்கும் சாத்தியமற்றதே.

இங்கு எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டவருக்கு மனரீதியான ஆற்றுப்படுத்தல் முக்கியமானது.

- சமூகத்தில் அவரை தனிமையாக்காது இணைத்திருத்தல்.
- அவரது மன எழுச்சிகளுக்கு தகுந்த இடங்கொடுத்தல்.
- அவரை மதித்தல்.
- எதிர்கால வாழ்வை திட்டமிட உதவுதல்.
- மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- தனி மனித உரிமையை பாதிப்படையாது பார்த்தல்.
- மனதில் நம்பிக்கை ஊட்டல்.
- மரணத்தை ஆரோக்கியமானதாக எதிர்கொள்ளத் தயார்ப்படுத்துதல் போன்றவற்றை வழங்கிஅவரைப் பராமரிப்பது சமூகத்தினதும் அவரது குடும்பத்தவர்களதும் கடமையாகும்.

எயிட்ஸ் எனும் உயிர் கொல்லி நோயிலிருந்து அந் நோயாளியுடனான தொடர்பாளர்களைப் பாதுகாப்பதற்கு இந் நோய் பற்றிய பூரண அறிவும் விழிப்புணர்வுமே மிக மிக அவசியமானது.

இந்த விழிப்புணர்வு அனைவரது மனங்களிலும் ஆழ வேரோடிப் பதிந்திருந்தால், எதிர்காலத்தில் இக்கொடிய நோயினால் ஏற்படும் ஆபத்தைத் தவிர்த்து ஆரோக்கியமானதொரு மனித சமுதாயத்தை உருவாக்கலாம் என்பதே உண்மை.

'வருமுன் காப்போம் வந்தவர்க்கு வாழ வழிகாட்டுவோம்'

## குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை கமநலகேந்திர நிலையப் பிரிவில் உள்ளகருவில் குளம், வேலணை முத்தாய் குளம், அல்லைப்பிட்டி பெரிய மண் குளிக்குளம்ஆகிய 3 விவசாயக் குளங்கள் தற்போது உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அந்தந்தப் பகுதி விவசாய சம்மேளனங்களின் உதவியுடனும் விவசாயிகளின் பங்களிப்புடனும் இப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(உ)

## புள்ளி விபரக் கையேடு

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர் பிரிவிலுள்ள, சமூகசேவை நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் கைத்தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் விபரங்கள் அடங்கிய புள்ளிவிபரக் கையேடு தயாரிக்கப் படவுள்ளது.

இதன்பொருட்டுவிபரங்களை மேற்படி நிறுவனங்களிடம் இருந்து வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் கோரியுள்ளது.

(உ-23)

## இராசி பலன்

2-11-2002

(ஐப்பசி 16, சனி)

துவாதசி மு.ப.10.10 வரை
உத்தரம் ந.ப.2.39 வரை
இராகு காலம்-9.04-10.34
நல்லநேரம்-3.04-4.34
சனிப்பிரதோஷ விரதம்

**மேடம்**
காரிய சாதனை, தொழில் முன்னேற்றம், உஷ்ண நிலை, மனமகிழ்ச்சி

**இடபம்**
சிறுவியாதி, முயற்சி கைகூடும், மனச்சோர்வு, பெரியோர் மனஸ்தாபம்

**மிதுனம்**
ரோகபயம், விரும்பாதோர் உறவு, காரியதாமதம், குடும்ப சுகம்

**கடகம்**
நினைத்தகாரியம்கைகூடும், தனவரவு, அன்னியர் சந்திப்பு இனியசம்பவம்

**சிங்கம்**
கடுமையான வார்த்தை, தொழில் கஷ்டம், பெண்கள் உதவி, கௌரவக் குறைவு,

**கன்னி**
நல்ல முயற்சி, சயன சுகம், எதிர்பாராத நன்மை, நண்பர்கள் உதவி

**துலாம்**
உஷ்ண ரோகம், சயனசுகக் குறைவு, பிதா சிந்தை, காரிய தாமதம்,

**விருச்சிகம்**
தொழில் சிந்தை, மன மகிழ்ச்சி, கௌரவமான நிலை காரிய நன்மை

**தனுசு**
கடினஉழைப்பு, நல்லசெய்தி உற்சாகம், முயற்சி கைகூடும்

**மகரம்**
அச்சமான நிலை, புதிய திட்டமிடல், வயிற்றுக் கோளாறு, பிரயாணம்

**கும்பம்**
எதிர்பாராத பிரச்சினை, உடல் வியாதி, பிரயாணபயம் முயற்சி தாமதம்

**மீனம்**
போசன சுகம், குடும்பசுகம், அபூர்வ சந்திப்பு, காரிய சித்தி

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# அகத்தினை நெகிழவைத்த அழைப்பினை ஏற்று முதுமை பாராது நானும் லண்டன் சென்றேன்

அது ஓர்அன்பான அழைப்பு. அகத்தினை நெகிழ வைத்து, நான் இந்த அழைப்புக்கு தகுதியான வனா என்று நீளநினைந்திட வைத்த அழைப்பு.

கதிரவன்மறையாய் பேரரசெனத்திசையெலாம் இசை போக்கய வல்லரசாகிய பிரித்தானியாவின தலைநகரிலிருந்து (லண்டனிலிருந்து) வந்த அழைப்பு அது!

ஒருகாலத்தில்யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் என்னிடம் கற்றவரும், அக்கல்லூரியின் முன்னாள் அதிபரைப் பெண் கொடுத்த மாமனாராகப் பெற்றவரும் லண்டனில் உயர்பதவி வகித்து வருபவருமானபதஞ்சலி நவீந்திரன் வழங்கிய அழைப்பு.

ஓராண்டுக்குமுன்புசில காரணங்களைக் காட்டி, நான் லண்டன் வீருவதானால் பிரயாணக் கட்டண ஒழுங்கு தாம் செய்வதாகவும் அங்குள்ள ஆலயங்களில் சொற்பொழிவுகளுக்கு தாம் ஒழுங்குசெய்வதன் மூலம் சிறிது பண வருவாய்ஏற்படுத்தித் தருவதாக வும் ஆசை காட்டி, முன்னு தாரர்காளாகச் சில பிரபலங்களின் பெயாகளை யும் குறித்திருந்தார்.

### தயக்கம்

நான்இவ்வழைப்பினை ஏற்கப் பெரிதும் தயங்கினேன். 'எனது நடைமுறை, உணவுமுறை, முதுமை, நோய்,வயதுக்கேயுரிய தடுமாற்றங்கள், கவனயீனங்கள,

## சொக்கன்

மறதிகள் என்பனவே என் தயக்கத்திற்கு காரணங்கள் ஆனால்... என்மனைவி, மக்கள், மருமக்களோ என்தயக்கத்தைக் கண்டு என்னை ஏளனம்செய்தனர். ''என்அவரும் ,கச்சேரி சென்று உத்தியோகம் வகிக்கிறாா' என்றுபெருமைப்பட்ட அக்காலத்து மனைவிபோல லண்டன் செல்வது மாபெருஞ் சாதனை என்றும் அச்சாதனை வீரனாக நான் மாற வேண்டும்என்றும்அவர்கள் பெரிதும் விரும்பினார்கள் போலும்!

இந்தவிருப்பம் ஒரு பாலாக, என்மக்களில்ஒருவனான ஞானஸ கந்தன் லண்டன் வாசியாகிப் பல ஆண்டுகளாயினும் அவனைக் காணாததும் அவன் பற்றி விரிவாக அறியாததும் இருந்த அவாகள் அவனை நேரிற்காணஇந்த வாய்ப்பை நான் பயன்படுத்த வேண்டும் என்றபேரவாவே மற்றொரு பலமான காரணமாய் அமைந்தது எனலாம்.

இந்த ஆவலினை நிறைவேற்ற எனதுதந்தைப் பாசமும் முனைந்து முன் நின்றதால் நவீந்திரனின் கோரிக்கையை ஏற்று, தொலைபேசியில்என் ஒப்புதலை அவருக்கு அளித்தேன்.

ஆனால்நவீந்திரனுக்கு அந்நேரத்தில் தாயகம்திரும்பி வந்து செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டதாயினும் முதியவனாகிய எனக்குசெப்டம்பர் மாதத்திற்குப் பின்வரும் குளிர்சுவாத்தியம் ஒத்துவராது என்பாதாலும் (அவர் என்னையூன்,யூலை மாதங்களில் வரஅழைப்பு விட்டிருந்தார்)தமது அழைப்பை ஓராண்டுஒத்திப்போட என் சம்மதத்தை வேண்டினார்.

ஆனால் ரவீந்திரன் மூலம் என்னுடைய லண்டன் பயணத்தை அறிந்து கொண்ட என் மக்கள் ஞானஸ் கந்தன் (லண்டன்), பாலஸ் கந்தன் (பிரான்ஸ்) ஆகியோர் அது ஒத்திப்போடப்படுவதை விரும்ப வில்லை. அவர்கள் என்னை இவ்வாண்டே அழைக்க ஒழுங்கு செய்யுமாறும், தாங்களே பயணக் கட்டணம், தங்கல் யாவிற்கும் பொறுப்பு என்றும் நவீந்திரனுக்கு உறுதி அளித்தார்கள்.

### முன்முயற்சி

இந்நிலையில் நவீந்திரன் யாழ். இந்துக் கல்லூரிப் பழைய மாணவரின் கலை நிகழ்ச்சி ஒன்றுக்கும், லண்டன் மேற்கில் நவீந்திரனின் தலைமையில் நடந்துவந்த தமிழ்ப் பாடசாலைகளின் வெள்ளி விழாவிற்கும் சிறப்பு விருந்தினராக என்னை அழைப்பதாகிய ஒழுங்கை மேற்கொண்டு அவற்றிற்கான அழைபபுக்களையும் நான் லண்டனிலே தங்குவதற்கான ஒழுங்குறுதியையும் (sponsor) செய்துகொடுத்தார்.

ஆக, நவீந்திரனின் முன்முயற்சிகளும்முயற்சிகளைச் சிக்கெனப்பிடித்துக்கொண்டு என் மகன்ஞானஸ்கந்தன் செய்த ஏற்பாடுகளுமாய்க்கூடி என் லண்டன் பயணத்தை உறுதி செய்தன.

சர்வதேசப் பயணக கடவுச் சீட்டு முன்னரே இருந்த போதிலும், வீசா(visa) வினை இலங்கைத்தூதரகத்தில் பெறுவதாகிய முயற்சி, பகீரதத்துவமானது என்று அனுபவம் வாய்ந்தசிலா எச்சரிக்கை செய்ததால் அதற்கான முன்முயற்சிகளையும் இங்கிருந்தே மேற் கொள்ள வேண்டியிருந்தது.

என் மாணாக்கரும் லண்டன், கனடாமுதலாம் நாடுகளுக்கு அடிக்கடி சென்ற அனுபவம் வாய்ந் தவ ருமான செஞ்சொற செல்வர் ஆறுதிரு முருகனின் அறிவுரை சமயத்தில் கைகொடுத்தது.அவர் சொன்னபடி மேலதிக அரச அதிபரும், நண்பரும் எழுத்தாளருமான து.வைத்திலிங்கம் நண்பர்

பேராசிரியர் நந்திஆகியோரின் பரிந்துரை க்கடிதங்கள் எனக்கு யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் வழங்கியகௌரவ கலா நிதிப் பட்ட ஒளிப்படப்பிரதி என்பவற்றைப் பக்கபலங்களாகக் கொண்டு 21.06.2002 அன்று கொழும்பு பயணமானேன்.

### வீசா

வயதுஎழுபத்திரெண்டு தமிழகம் உட்பட இலங்கை யிலும் ஏறக்குறைய எல்லா இடங்களுக்

(4ம் பக்கம் பார்க்க)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை- கரவெட்டி சந்தைகள் இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல்-2003

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:-2002.11.13 நண்பகல்12.00மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:-2002.11.14 முற்பகல் 10.30மணிவரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி:- 2002.11.14 முற்பகல்11.00மணி
04. கேள்வித்தொகை,கேள்விப்பத்திரப்பணம் ஆகியவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி20%சேர்த்து அறவிடப்படும்
05. மேலதிக விபரங்களை தலைமைஅலுவலகத்தில்அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகைவிபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| நெல்லியடிஉபஅலுவலகம | | | |
| 01.மரக்கறிச்சந்தை-நெல்லியடி | 1,489,000 /- | 20000 /- | 1000 /- |
| 02.மீன்சந்தை-நெல்லியடி | 150,000 /- | 2000 /- | 250 /- |
| 03.கோவிற்சந்தை(பைசிக்கிள் பாதுகாப்புநிலையம்உட்பட) | 77,000 /- | 3500 /- | 250 /- |
| 04.கொட்டடிச்சந்தை | 3000 /- | 500 /- | 250 /- |
| 05.துவிச்சக்கரவண்டிபாதுகாப்பு நிலையம்நெல்லியடி | 261,000 /- | 10000 /- | 250 /- |
| 06.நெல்லியடிஆட்டிறைச்சிக்கடைஇல.1 | 33,000 /- | 500 /- | 250 /- |
| 07.நெல்லியடிஆட்டிறைச்சிக்கடைஇல.2 | 38,500 /- | 500 /- | 250 /- |
| 08.நெல்லியடிஆட்டிறைச்சிக்கடைஇல.3 | 31,000 /- | 500 /- | 250 /- |
| 09.நெல்லியடிமாட்டிறைச்சிக்கடைஇல.2 | 268,000 /- | 3000 /- | 250 /- |
| 10.நெல்லியடிமாட்டிறைச்சிக்கடைஇல.3 | 268,000 /- | 3000 /- | 250 /- |
| 11.கோவிற்சந்தைஆட்டிறைச்சிக்கடை | 20,000 /- | 500 /- | 250 /- |
| 12.கொட்டடிச்சந்தை | 3,000 /- | 500 /- | 250 /- |
| 13.கோவிற்சந்தைமாட்டிறைச்சிக்கடை | 132,000 /- | 3000 /- | 250 /- |
| உடுப்பிட்டி உப அலுவலகம் | | | |
| 14.உடுப்பிட்டிச்சந்தை | 385,000 /- | 5000 /- | 250 /- |
| 15.அந்திரான்சந்தை | 23,000 /- | 500 /- | 250 /- |
| 16.நவிண்டில்சந்தை | 7,000 /- | 500 /- | 250 /- |
| 17.உடுப்பிட்டிச்சந்தைமாட்டிறைச்சி கடை | 207,000 /- | 2000 /- | 250 /- |
| 18.உடுப்பிட்டிச்சந்தைஆட்டிறைச்சிகடை | 9,000 /- | 500 /- | 250 /- |
| 19.அந்திரான்சந்தைமாட்டிறைச்சிகடை | 36,000/- | 500 /- | 250 /- |
| 20.உடுப்பிட்டிச்சந்தைதுவிச்சக்கர வண்டிபாதுகாப்புநிலையம் | 51,000/- | 500 /- | 250 /- |
| கட்டைவேலிஉபஅலுவலகம் | | | |
| 21. துன்னாலை வடக்கு சந்தை | 600/- | 500/- | 250/- |
| 22. துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 26,000/- | 500/- | 250/- |
| 23, அல்வாய் தெற்கு மாட்டிறைச்சிக் கடை | 18,000/- | 500/- | 250/- |

[c/5208]

த. ஜெயராசா, ஜே.பி,
தலைவர்.வட.தெ.மே.பிரதேச சபை,
கரவெட்டி.



## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## ஏல விற்பனைஅறிவித்தல்.

இதன் கீழ் விபாிக்கப்பட்டுள்ள பொருட்கள் 2002.11.05ம் திகதி கீழ்குறிப்பிட்ட உப அலுவலகங்களில் அவற்றிற்கெதிரே குறிப்பிட்ட நேரத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (அலுவலக நேரத்தில் குறித்த இடங்களில் பொருட்களைப் பார்வையிடலாம்) ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் அன்றைய தினம் ரூ.100/- ஐ வைப்பாகச் செலுத்திப் பங்கு பற்ற முடியும். அத்துடன் சித்தி பெற்ற ஏலதாரர் அன்றைய தினமே பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதுடன், பொருட்கள் அனைத்தையும் அப்புறப்படுத்தல் வேண்டும்.

### சுன்னாகம் உப அலுவலகம் - காலை10.30 மணி

01. மரத்தினாலான யன்னல் நிலைகள் - 5''x3'' இரண்டு வெளிகள் 8' 3''x8'- எண் 2. (யன்னல் ஒன்றிற்கு குறுக்கே 3/4'' விட்டமுடைய 3'-9'' கம்பியும், 6'-5''x11''-0'' கம்பி வலையும் பொருத்தப்பட்டுள்ளது.)
02. மரத்தினாலான யன்னல் நிலைகள்- 2'x 2 1/2'' மூன்று வெளிகள்' 6'-5''x11'-0''- எண் 2.
03. மரத்தினாலான கதவு நிலைகள்-4''x3'':5'-0''x8'-6''- எண 2.

### 02 உடுவில் உபஅலுவலகம் - காலை 11.15 மணி.

01 பனை வளை 16'-எண் 1.
02 பனை வளை 6''x2''-10'-8' -எண் 1 ,1.
03 பனை மரம் 11 1/2',9 1/2',5',6', - எண் 10, 02, 8, 26.
04 சலாகைகள் - 24 துண்டுகள்.
05 சலாகைகள் - 6',2''x1''-11',7',6' - எண் 30, 3, 2, 1.
06 ஓடுகள் - எண் 575.
07 பனம் கப்பு - 7'' விட்டம் - 7' 10'' - எண் 03.
08 கைமரம் - 4''x2''-8',5',7' ,12' - எண் 14, 06, 01, 01.
09 அரிந்த மரம் -4''x2'' -6'3'' - எண்05
10 அரிந்த மரம் - 6''x6'' - 10'-0' - எண் 02
11 வெற்றுத்தார் பரல்கள்.
   01. 172 லீற்றர் கொள்ளளவுடையது - 145
   02. 140 லீற்றர் கொள்ளளவுடையது 185.

க. கமலசேகரன்
ஜே.பி.யு.எம்
தலைவர்.

வலிதெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

[C/5210]

# முதல் சுற்றுபேச்சு 4 கட்டங்கள் நடைபெறும்

## சமாதானச் செயலகம் தகவல்

(கொழும்பு)

இப்பொழுது தாய்லாந்தில் நடைபெறுவது இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் அல்ல முதலாம் சுற்றின் இரண்டாம்கட்டம்ஆகும் என்றும் மேலும் இரண்டு கட்டங்களின் பின்னர்தான் இரண்டாவது சுற்று பேச்சுக்கள் நடைபெறும் என்றும் சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது.

முதலம் சுற்றுப்பேச்சைப் பின்தொடர்ந்து மூன்று கட்டங்களில் பேச்சுநடைபெறும். மூன்றாம் கட்டப்பேச்சுக்கள் டிசம்பர் 2, 3, 4, 5, ஆம் திகதிகளிலும் 4 ஆம் கட்டப் பேச்சுக்கள் 2003 ஆம் ஆண்டு ஜனவரி 6, 7, 8, 9, ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

இதேவேளை, முதலாம் சுற்றுப்பேச்சின் மூன்றாம்கட்டப் பேச்சுக்கள் தாய்லாந்தில் நடைபெறும் சாத்தியங்கள் இல்லையென்றும், தாய்லாந்து மன்னரின் பிறந்தநாள்விழா டிசம்பர் 5 ஆம்நாள் நடைபெறவிருப்பதே இதற்கான காரணம் என்றும் சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பேச்சுக்களின் திகதிகள் மாற்றப்பட்டால் 3 ஆம் கட்டப்பேச்சுக்களையும் தாய்லாந்திலேயே வைத்துக்கொள்ள முடியும் என்றும் இவ்வாறு திகதிகள் சரிசெய்யப்படாதவிடத்து 3 ஆம் கட்டப்பேச்சுக்கள் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறும்என்றும் சமாதானசெயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

# சுதந்திர தொழிற் சங்க பிரதிநிதிகள் யாழ். வருவர்

(ஈச்சமோட்டை)

'தொழிற் சங்கங்களினூடாக சமாதான முன்னெடுத்தல்' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்னிலங்கையிலிருந்து 200 பேர் அடங்கிய சுதந்திர தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நாளையாழ் வருகை தரவுள்ளனர்.

யாழ். வரும் இவர்கள் எதிர்வரும் 4 5 ஆம் திகதிகளில் யாழ். தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் இணைந்து கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர்.

சமாதானத்தைமுன்னெடுப்பதில் தொழிற்சங்கங்கள் எப்படியான பங்களிப்புகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து இதில் விரிவாக ஆராயப்படவுள்ளது. (உ-59)

# மழமத்தியிலும் தீபாவளி வியாபாரம் களை கட்டியது

## நகரப்பகுதியில் சனவெள்ளம்

(ஈச்சமோட்டை)

அடிக்கடிபெய்துவரும் பருவமழையின் இடையூறு மத்தியிலும், யாழ் நகரில் தீபாவளி வியாபாரங்களை கட்டியுள்ளது.

கடந்த 20 வருடங்களின் பின்னர் அமைதியான சூழலில் வருகின்ற தீபாவளிப் பண்டிகை இதுவென்பதால், மக்கள் மிகுந்த சந்தோசத்துடன் நாலா திக்கிலும் இருந்துதீபாவளிக் கொள்வனவுக்காக யாழ். நகரை நோக்கி பெருமளவில் தினமும் படையெடுக்கின்றனர்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி, தென் பகுதியில் இருந்து நடைபாதை வியாபாரிகள் நகரில்குவிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-59)

# ஹக்கீமின் பயணத்தில் தாமதம் ஏற்பட்டது ஏன்?

(கொழும்பு)

கூட்டுச் செயலணியில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம்மற்றும் அதனூடாகமுன்னெடுக்கப்படும் மீள்குடியமர்வு அபிவிருத்திநடவடிக்கைகள்குறித்து பிரதமரிடமும்அரசாங்கத்திடமும்சில உத்தரவாதங்களையும் தெளிவுகளையும் பெற்றமையினாலேயே தனது தாய்லாந்து பயணம் தாமதமாகியதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து நக்கோன் பத்தொம் என்ற இடத்தில் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும்விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்களுக்குமிடையே நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது.

இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் ஹக்கீம் புதன்கிழமை அதிகாலையில் பயணமாவதற்கு ஏற்கனவேஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் இப்பயணம் இறுதி சந்தர்ப்பத்தில் பிற்போடப்பட்டு நேற்று அதிகாலையில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

கூட்டுச் செயலணி விவகாரத்தில் சில சந்தேகங்கள் உள்ளன. குறிப்பாக கிழக்குமாகாணத்தில் இதன்செயற்பாடுகள் எப்படி அமையப் போகின்றன? இச் செயலணியில் முஸ்லிம்களுக்கு உரிய இடம்அளிக்கப்படுமா? என்பன அவற்றில் பிரதானமானவை. இது முஸ்லிம்மக்கள்மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

கூட்டுச் செயலணியின் ஊடாக வடக்கு கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் போது அது சிங்கள, தமிழ்பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தக் கூடாது.

யுத்தத்தால் முஸ்லிம்களும், முஸ்லிம் பிரதேசங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன அப்பிரதேசங்களும் கூட்டு செயலணியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குள் சேர்க்கப்பட வேண்டுமென பிரதமரிடம் வலியுறுத்தியதாக மேலும் தெரிவித்துள்ளார். (உ-7)

## சமாதானப்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தநிறுத்த உடன்படிக்கையில தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்தும் புரிந்துணர்வு உடன் படிக்கையை அமுல் செய்யும் போது எழுந்திருந்த நடைமுறைச்சிக்கல்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டு, இருதரப்பினரிடையேயும் உடன்பாட்டை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் அரசுப்பிரதிநிதியாகக் கலந்து கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமானரவூப் ஹக்கீமும்இந்த இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வுள்ளார் என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம)


வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

# 2003-ம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

## (பொதுச்சந்தை, இறைச்சிக்கடைகள் கருவாட்டுக்கடைகள்)

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், கருவாட்டுக்கடைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2003-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2003-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி வரையிலான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 2002.11.08-ம் திகதி பி.ப.2.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்

கேள்விப் பத்திரங்கள் யாவும் வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் உரிய கேள்வி வைப்புப்பணம் கேள்விப்படிவப் பணத்துடன் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியையும்(VAT)செலுத்துவதன் பேரில் 2002.11.07-ம் திகதி பி.ப.2.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை 'தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்' என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு பதிவுத் தபால் மூலம்2002.11.08ம் திகதி பி.ப 2.00மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும் கேள்விப் பத்திரங்கள் 2002.11 08-ம்திகதி பி ப 3 00மணிக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ, பிரதிநிதியோ சமூகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர் அடையாள அட்டையையுந் தவறாது கொண்டுவருதல் வேண்டும். தங்கள் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டால், தனியார் காணிகளில் இறைச்சிக் கடை நடத்துவதற்கு காணிச் சொந்தக்காரருடன் செய்து கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள்சபையில் பெற்ற பின்னர் உரிய முறைப்படி விண்ணப்பிக்காவிடில் பெறப்பட்டவிண்ணப்பப் படிவங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளுந் நேரத்துக்கு முன்னதாக சபைக்கு ஒப்படைக்க வேண்டும் அவ்வாறு விண்ணப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு அதிகாரம் உண்டு சந்தைகளை குத்தகைக்கு பெற்றுக் கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியில் 3%க்கு மேல் வரி அறவிடக்கூடாது.

இது சம்பந்தமாக மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகை விபரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத் தொகை (வற் வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| **01. சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 01. சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | — | 500-00 | 5000-00 | 2317,000-00 |
| 02. உடுவில் கிளிச்சந்தை | — | 150-00 | 1500-00 | 68,250-00 |
| 03. உடுவில் ஆலடிச்சந்தை | — | 150-00 | 500-00 | 5,000-00 |
| 04. சுன்னாகம மாட்டிறைச்சிக்கடை | 100-00 | 200-00 | 2000-00 | 551,775-00 |
| 05. சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 100-00 | 150-00 | 1500-00 | 57,800-00 |
| 06. சுன்னாகம் கருவாட்டுக்கடை இல:3 | 60-00 | 50-00 | 100-00 | 11,060-00 |
| 07. சுன்னாகம் கருவாட்டுக்கடை இல.4 | 60-00 | 50-00 | 100-00 | 8,925-00 |
| 08. சுன்னாகம் கருவாட்டுக்கடை இல.5 | 60-00 | 50-00 | 100-00 | 13,000-00 |
| 09. சுன்னாகம் கருவாட்டுக்கடை இல.6 | 60-00 | 50-00 | 100-00 | 5,550-00 |
| 10. சுன்னாகம் கருவாட்டுக்கடை இல.7 | 60-00 | 50-00 | 100-00 | 8,925-00 |
| **02. உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 01. மருதனார்மடம் சந்தை (துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் உட்பட) | — | 500-00 | 5000-00 | 2213,000-00 |
| 02. இணுவில் சந்தை | — | 100-00 | 1000-00 | 42,000-00 |
| 03. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100 00 | 150-00 | 1500-00 | 31,600-00 |
| 04. தாவடி ஆட்டிறைச்சிக்கடை | — | 150-00 | 1500-00 | 40,000-00 |
| 05. தாவடி தெற்கு மட்டிறைச்சிக்கடை | — | 150-00 | 1500-00 | 56,000-00 |
| 06. உடுவில் மல்வம் மாட்டிறைச்சிக்கடை | — | 150-00 | 1500-00 | 58,500-00 |
| **03. ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 01. ஏழாலை சந்தை | — | 250-00 | 1000-00 | 12,600-00 |
| 02. ஏழாலை - மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | — | 150-00 | 1500-00 | 46,700-00 |

குறிப்பு:- கேள்விக் காரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையுடனும், அது தொடர்பான ஏனைய கட்டணங்களுடனும் (வாடகை, கொல்களக் கட்டணம், உரிமக் கட்டணம்) 20% பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்) யையும் செலுத்துதல் வேண்டும்.

க. கமலசேகரன், ஜே. பி.யு. எம்.
தலைவர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
2002-10-31.

(சி-5209)

தேரான் தெளிவும்
தெளிந்தான் கண்
ஐயுறவும் தீரா இடும்பை தரும்
குறள்

# வலம்புரி

## நிதானம் அவசியம்

நாட்டில் சமாதான முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அரசும் விடுதலைப் புலிகளும் தாய்லாந்தில் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகையதொரு நல்ல சூழ்நிலையை வரவேற்பது மட்டுமன்றி அதனைப் பாதுகாப்பதிலும் இலங்கைத் தீவின் ஒவ்வொரு பிரஜையும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

இருபது வருடகால யுத்தம் நாட்டில் ஆழப் பதித்துவிட்ட வடுவை நீக்கப் பல வருடங்கள் எடுப்பது திண்ணம். இந்நிலையில், விடுதலைப் புலிகள் குற்றம் இழைத்துள்ளார்கள் அல்லது அரசு அராஜகம் புரிந்துள்ளது என்பது தொடர்பாக வெளியிடப்படும் கருத்துக்கள் சமாதான முயற்சிக்கு ஆரோக்கியமானதாக அமையாது.

இருதரப்பும் மேற்கொண்ட ஆயுதரீதியான நடவடிக்கையின் பிரதிபலிப்பாகவே 'சமாதானப் பேச்சு' என்ற முயற்சி முன்னெடுக்கப் படுகிறது சமாதான முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எதனை ஒழிக்க முற்படுகிறோமோ அதனை எடுத்து ஆராய்வதை விடுத்து அத்தகையதொரு சம்பவங்கள் மீளவும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வதே புத்திசாலித்தனம்.

நாட்டில் சமாதானம் ஏற்பட்டுவிடுமாயின் அது நீதி பரிபாலனத்திற்குப் பெரும் உறுதுணையாக இருக்கும். குற்றவாளி இல்லாத குற்றங்களும், எழுத்து மூலப் பதிவுகளும் உள்ளதையும் பழுதாக்கி விடுமேயொழிய அதனால சமாதானம் ஏற்படமாட்டாது. நாட்டில் அமுல் படுத்தப்பட்டிருக்கும் சட்டங்களே சமாதானத்திற்குத் தடையாகவுள்ளதெனில் அதனை மாற்ற முற்படுவது அவசியமாகும்.

அதேபோல் நாட்டில் புரை சூழ்ந்துள்ள யுத்தத்தை அடியோடு அகற்றுவதற்கு இடம், காலம், நேரம் அறிந்து முடிவுகளை எடுப்பது மிக மிக அவசியமானதாகும்.

இல்லையேல் ஒருபுறத்தில் சமாதானமுயற்சிகள் முன்னெடுக்கப்பட மறுபுறத்தில் சமாதானத்தைக் குழப்பிவிடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட ஒட்டுமொத்தத்தில் இலங்கையில் யுத்தத்திற்கு ஓய்வேயில்லை என்பது முடிவாகிவிடும்.

# பழமையையும் மறவாது புதுமையையும் தழுவிய முருகையனின் தொகுப்பு நாடக நூல் 'உண்மை'

நூல் : 'உண்மை'
ஆசிரியர் ; கவிஞர் இ. முருகையன்
வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை
விலை; ரூபா. 175.00

**ந. கல்யாணி**
ஆசிரியை
கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி

ஈழத்தின் நாடகச் செல்நெறி, மரபுவழி நாடகங்கள், நவீன நாடகங்கள் என்ற இரு பிரிவுக்குள் அடக்க முற்பட்ட காலம் ஒன்று உண்டு. நாடகம் என்பது ஒரு நிகழ்த்து கலை. நவீன நாடக மரபு தோற்றம் பெற்று நவீன தொழில்நுட்ப அணுகு முறையோடு பலவடிவங்களில் பவனிவரத் தொடங்கியுள்ளது இதில் குறியீட்டு நாடகம் தனக்கென ஒரு தடத்தை ஆழமாகப் பதித்து வீறுநடை போடுகின்றது.

### 'உண்மை'

தொகுப்பு நாடக நூலான மூதறிஞர் முருகையனின் 'உண்மை' பழமையையும் மறவாது, புதுமையையும் தழுவிச் செல்வதைக் காண முடிகிறது. பொய்க்கால், குற்றமே குற்றம், தந்தையின் கூற்றுவன், இருதுயரங்கள், 'க'லிலியோ என்ற ஐந்து வகை நாடகங்கள், ஐந்து வகை அனுபவங்களுடன், ஆசிரியரின் முன்னுரையோடு வெளிவந்துள்ளது. அட்டைப் படம் உலகமே தேன் கூடு, நடிகர்கள் தேனீக்கள், நாமெல்லாம் தேனுறிஞ்சிப் பறவைகளே, என்பதுபோலச் சுழல்கிறது.

### பொய்க் கால்

நாடகங்கள் எழுதப்படுவது நடிப்பதற்குத்தான் என்பதனை 'பொய்க்கால்' நாடக மூலம் அறிகிறோம். அதற்குள் குறியீட்டுத் தேடல்களையும் காண்கிறோம். வாசிக்கும் வாசகருக்கான திரை அரங்குச் சூழலையும் காண்கிறோம்.

'பொய்க்கால்' கட்டுக்கோப்பான பழைய சமூக அமைப்பைத் தத்ரூபமாகக் காட்டுகிறது. மனிதவிழுமியப்பண்பு அமைதி, உதவி, தருமம், தத்துவம், அருள் முயற்சி, சிக்கனம் இவற்றோடு சீர்த் தமிழ்க் கலைபேணும் செவ்வியையும், எளிமையில்பெருமை காணும் தன்மையையும்காண முடிகிறது.

நெறிமுறை, ஒழுக்கம், நியாயம் என அறவழி போதிக்கிறது. புரியவில்லை நின்று கேட்க நேரமில்லை. பின்னர் போகின்றனர் வேடதாரியிடம் அவர் உயர்ந்தவர் எதனால்? பொய்க்காலால், பழமைக்கும் புதுமைக்கும் போராட்டம் உண்மைக்கும் பொய்க்குமிடையே வாதாட்டம் குறுக்கு வழியில் பாசவலை, ஆசைவலைவிரித்தும் பயனில்லை அறுத்து வெளியேறுகின்றனர்.

அது மட்டுமல்ல பொய்க் காலினூடே பல பொய்க்கால்கள் நன்றாகத் தெரிகின்றன.

### குற்றம் குற்றமே

தமிழ் மக்களிடையே ஜனரஞ்சகப்படுத்தப்பட்ட புராண மரபை ஒட்டிய கதைக்கருவை 'குற்றம் குற்றமே' என அமைத்துள்ளார் ஆசிரியர் இந்நாடகம் தரும் பாடம்.

'ஆக்கியோன் பெயரை
வைத்தே
ஆக்கத்தின் நயங்கள்
பேசும்
போக்கற்றோர் போக்குக்
கெல்லாம்
புதைகுழிதோண்டி
விட்டீர்'

என்பதாகும். உண்மைக்கே இலக்கியத்தில் உயர்வானஇடமுண்டு என்பதாகும்.

### தந்தையின் கூற்றுவன்

'தந்தையின் கூற்றுவன்' எமது பண்பாட்டிற்கு ஒவ்வாத கதைக்கரு அது ஒரு கிரேக்க நாடகத்தழுவல் என்பது ஒரு ஆறுதல் சொஃவக்கிளிஸ் எழுதிய 'இடிபஸ்றெக்ஸ்' எனனும் கிரேக்க நாடகத்தை அடியொற்றி எழுந்தது. இதனை முற்பாட்டிலேயே 'முருகையன் புதுக்கித் தந்தான் முத்தமிழ் முறைமையாலே' என, தந்த பாங்கு மெச்சக் கூடியது.

அது மட்டுமல்ல ஊழ், தெய்வம், மாயை போன்ற சொற்களும், சாத்திரம், குறிசொல்லல், தெய்வத்தின் குறிச்சொல் மெய்மை என்ற சொற்களும், சொற்றொடர்களும் எமது சமய தத்துவத்தையும் சமய நம்பிக்கையையும்தொட்டுச்செல்வதாகஉள்ள போதுதழுவலை மறந்தநிலையே மனதில் உலவுகிறது.

### இரு துயரங்களும், 'க'லிலியோவும்

இரு துயரங்கள் நாடகமும், 'க'லிலியோ நாடகமும் பாத்திரங்கள் குறைந்த உரையாடற் பாங்கானவை. 'இரு துயரங்கள், அன்றன் செகாவ் இன் சிறுகதைத் தழுவல். அதை நாடகமாக்கியுள்ளார் ஆசிரியர். அதேபோல 'க'லிலியோ என்பது 'பேட்ரோல்ற் 'பி'ரெச்ற்றின் 'க'லிலியோ என்னும் நாடகத்தில் வரும் ஒரு பகுதியைப் பின்பற்றி உருவாக்கப்பட்டது.

அவரவர் துயரங்கள் அவரவருக்குப் பெரிது என்பது யதார்த்தம், ஆனால் அதை நாடகமாக்கிய போது முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் நெறியாளர் உலாவும், அவர் தீர்ப்பும் நடைமுறை, தன் தன் துயர் தனக்குப்பெரிது, துயர்பகிர்வு, துயரக்குறைவு, துயரப்படும் மனதிற்கு நீதி, நியாயம், தருமம் இவையொன்றும் தெரியாது, என்பது உண்மை.

கலிலியோ நாடகத்தினூடேமத அழுத்தம் ஒருவிஞ்ஞானியை அவன் செயற்பாட்டைஅடக்கமுற்படுகிறது ஆனால் அது நீறு பூத்த நெருப்பு ஆனபடியால்தான், அச்சூழ்நிலையிலும் இயக்கவியல் பற்றிய ஆய்வொன்று வெளியுலகுக்கு அனுப்பமுடிகிறது. அதைவிட தத்துவஞானியை விஞ்ஞானி சுட்டவந்த வார்த்தை கண்ணை இறுக்கி மூடிக்கொண்டால், உண்மை பொய்யாகி விடுமா? அல்லது உண்மையைப் பொய்யென்று வாயால் மறுத்து விட்டால் மட்டும் பொய்யாகிவிடுமா? எவ்வளவு தத்துவம்?

திறந்த; 'உண்மை' நாடக நூலை மூடும்போது நாடகங்கள் நடிப்பதற்கே மேடையில் இடம்பெறும்நிகழ்வுகள் தான் நாடகத்தின் முழுமையான உயிர்நிரம்பிய வடிவ நிலை என்ற ஆசிரியர் கூற்றை அவர்அமைத்துத்தந்த மேடையில், நெறியாள்கையில், சுதா பாத்திர வாயிலாகப் பெற்ற அனுபவத்துடன், அனுபவித்த உணர்வுடன் வெளியே வருகிறேன்.

# இலங்கை அரசின் இறைமையை விடுதலைப் புலிகள் மதிக்கின்றனர்

**சித்தார்த்தன் எம். பி.**

(கொழும்பு)

இலங்கை அரசின் இறைமையினை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என புளொட் இயக்கத்தின் தலைவரும்வவுனியா மாவட்ட பாராளுமன்ற, உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்வதற்காக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இலங்கை அரசாங்கத்தின் கடவுச்சீட்டினைப் பெற்று கட்டு நாயக்க விமான நிலைய மூடாக தாய்லாந்துக்கு பயணமாகியுள்ளனர்.

இது இலங்கை அரசாங்கத்தின் இறைமையை அவர்கள் ஏற்றுக் கொண்டதன் வெளிப்பாடாகும்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 250 நாட்களைக் கடக்கும் தறுவாயில் தாய்லாந்தில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னேற்ற கரமான பல கட்டங்களை எட்டியுள்ளது என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(உ-7)

## தினசரி தியானம்

### மகிழ்ச்சி

மகிழ்ச்சியாகிய உணர்வு' ஒரு உள்ளுணர்வாகும். உடல் உறுப்புகள் மனிதனுக்கு மகிழ்ச்சியாகிய கிளர்ச்சியை எழுப்பினாலும் அவைகளில் மகிழ்ச்சி இல்லை. புலன் இன்பம் ஆன்மீகப் பேரின்பத்தின் பிரதிபலிப்பாகும். ஒரு ஆசை நிறைவேறிவிட்டால் மனம் ஆன்மாவிடம் சென்று அங்கு சிறிது நேரம் ஓய்வு கொள்கிறது. அப்போது மனிதன் மகிழ்ச்சியை அனுபவிக்கிறான். ஆன்மா அல்லது பிரம்மன்தான். பேரின்பத்தில் ஒருருவம்.

சுவாமி சிவானந்தர்

# அண்மைய சம்பவங்கள் சமாதானப் பேச்சுக்களை எவ்வகையிலும் பாதிக்காது அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(பாங்கொக்)

அண்மையில்கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவும், அரசு-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை எந்தவகையிலும்பாதிக்கமாட்டாது என அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தாய்லாந்திலிருந்து அறிவித்துள்ளார்.

தாய்லாந்தில் ஆரம்பமாகியுள்ளஇரண்டாம்கட்டப் பேச்சுவார்த்தைக்கு அரசுப்பிரதிநிதிகள்குழுவுக்குத் தலைமை தாங்கிச்சென்ற அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கிலிருந்து மேலும்தெரிவித்திருப்பதாவது;

தாய்லாந்தில் கடந்தமாதம் நடைபெற்ற முதற்கட்ட சமாதானப் பேச்சுக்களின் போது இணக்கம்காணப்பட்டமுக்கிய விடயங்கள் தொடர்பாகவும் இரண்டாம்கட்டப்பேச்சில்கவனம்செலுத்தப்படவுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## பெண்ணின் கொலையைக் கண்டித்து
# வவுனியாவில் நேற்று மாபெரும் பேரணி

(வவுனியா)

வவுனியாவில் நேற்றைய தினம் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது. வுவனியா கல்நாட்டன குளத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை உட டியாக ஆரம்பிக்குாறு கோரியே இக் கண்டனப் பேரணி நடைபெற்றுளளது.

நேற்றுக் காலை வவுனியா கோவல் குளத்தில் இருந்து ஆரம்பமான கண்டனப் பேரணி வவுனியா அரச செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு அரச அதிபரிடம் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், இராணுவத தளபதி மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஆகியோருக்கு முகவரியிடப்பட்ட மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

பேரணியில் கலந்து கொண்டோர் வாய்களைக கறுப்புத் துணியால் கட்டி யிருந்தனர். பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் வவுனியா இராணுவ முகாமிற்கு அருகில் இருந்து மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

---

## உயர் பாதுகாப்பு....

கொள்ளவேண்டும் எனவும இவற றினாலேயே சமாதான நடைமுறைகளில் பிரச்சினைகள் எற்படுகின்றன எனவும்பேச்சுக்களில் பிரேரிக்க இருப்பதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன (ந)

## பாராளுமன்றத்தை......

கையில்:-

தமிழீழ விடுத்லைப்புலிகளின் போர் நடவடிக்கைகளை குற்றச் செயலாக அரசாங்கம் கருதியிருப்பது தவறானதொன்றாகும். போர் நடவடிக்கைகள் குற்றச் செயல்களென அரசு கருதினால் விடுதலைப்புலிகளும் அரசு மீது குற்றம சுமத்தி தீர்ப்பு வழங்கக் கூடிய புநிலையை உருவாக்கும.தாய்லாந்தில் தற்போது நடை பெற்று வரும் சமாதான பேச்சு வார்த்தை மிகவும் சமுகமான முறையிலேயே நடைபெற்று வருகிறது. பேச்சு வார்த்தை தொடர்பாக இபபோது தனிப்பட்ட முறையில் கருத்து வெளியிடமுடியாதுள்ளது. ஆனால் பேச்சுவார்த்தையின இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை கூட்டறிக்கை ஒன்று வெளியிடும இதனைத தொடர்ந்து பத்திரிகையாளர் மாநாடு ஒன்றும் நடைபெறும. இதில் இரண்டாம் சுற்றுப் பேச்சு வார்த்தை தொடர்பாக விளக்கமாக எடுத்துக் கூறப்படும் எனறும் அன்ரன பாலசிங்கம் தெரிவித்தார். இதேவேளை 19வது அரசியலமைப்பு சீர்திருத்தச் சட்டம் தொடரபாக நீதிமன்றம் அளித்த தீர்ப்பினால் அரசு ஆட்டம் கண்டுள்ள நிலையில் அரசு விடுதலைப்புலிகள சமாதானப் பேச்சுவார்த்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் பாராளுமன்றத்தில எவ்வாறு நிறைவேற்றப் போகிறீரகள் என்று அமைசசர் பேராசிரியர ஜீ.எல். பீரிஸிடம கலாநிதி அன்ரன பாலசிங்கம் நேரடியாகக் கேட்டபோது அடுத்த வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் வரைபொறுத்திருங்கள் என்றும் அதன போது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் நிருபிக்கப்படும் என்றும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ தெரிவித்தார்.தொடர்ந்து கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவிக்கையில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்கு கிடைப்பதற்கு இப்போதுள்ள சூழ்நிலையில் பாராளுமன்றத்தைக கலைத்து விட்டு தேர்தல் ஒன்றை நடத்தி மூன்றில் இரண்டு பெரும்பானமையை அரசு நிலைநாட்ட வேண்டும்.இதற்குரிய உதவிகளை விடுதலைப்புலிகள் செய்வதற்கு தயாராகவுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

## இடம் பெயர்ந்த.....

லெவ்பை நேற்று வலம்புரி காரியாலயத்திற்குவந்திருந்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் மற்றும் கிளிநொச்சி அரச அதிபர் எஸ்.இராஜநாயகம் ஆகியோரையும் மர்சூக் அகமட்லெவ்பை சந்தித்து உரையாடினார்

இச்சந்திப்பின்போது கிளிநொச்சியில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற முஸ்லிம்கள் தமது சொந்த இடத்தில் மீளக் குடியமரவரும் போது அவர்களுடைய சொந்த இருப்பிடங்கள் அவர்களுக்கு வழங்கப்படுமெனப் புலிகள் உறுதியளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நேற்று யாழப்பாணம் வந்திருந்த அமைச்சின் இணைப்பாளர் மர்சூக அகமட் லெவ்பை தீவுப்பகுதிக்கும சென்றிருந்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் நீதிமன்றம், காவல்துறை என்பவற்றையும் சென்று பார்வையிட்டதாகவும் அவர் மேலும் தெரிவிததுளளார். (வ)

---

## உருக்குலைந்த...

ஒப்படைக்கப்பட்டுள்ளது இதேவேளை சடலம் மீடக்கப்பட்ட கிணத்திற்கு அருகில் இருந்து சைக்கிள் ஒன்றும பொலிசாரினால் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. (த12,6)

---

## கிழக்கில்...

லாந்தில் நடை பெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்ததையில் ஏற்பட்டுளளது.

இருவருக்குமிடையே இணக்கம காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உடன் கவனம் எடுப்பதாகவும் இருவரும் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக கப்பட்டுளளது.

அமைச்சர் ஹக்கீமும்,கேணல் கருணாவும் நேற்றைய பேச்சு வார்த்தையின் போது முஸ்லிம் மக்களுக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகள் தொடர்பாக மனம் திறந்து பேசியதாக எமது செய்தியாளர் அறிவித்துளளார். (ம)

## களுத்துறைக் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதம்

(களுத்துறை)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 16 தமிழ் அரசியல் கைதிகள் எதிர்வரும் 5ம்திகதி முதல் மீண்டும் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுவிக்குமாறு கோரியே அவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவுள்ளனர். (த)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உலக இந்து மாநாடு ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்துவது தொடர்பான கருத்துக்கள் மற்றும் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான கூட்டம் இன்று பிற்பகல் 3மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் இந்து சமய ஆர்வலர்களைக் கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (ந-6)

---

## முஸ்லிம்களுக்கு

மட்டுமே முஸ்லிம்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

முஸ்லிம்களின் தாயகம், தேசியம்,சுயநிர்ணயம் என்பவற்றை ஏற்றால் மட்டுமே சமாதானப் பேச்சு வார்த்தையில் எம்மால் உடன்பட முடியும் இல்லையேல் நாமும் பிரிந்து சென்று ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும் என்று பிரபாகரன் விரும்பினால் நாம் போராடியே எமது சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எனவே எமது இளைய போராளிகள் அனைவரும் போராடியே ஆக வேண்டும் என்றும் அதாவுல தெரிவித்துள்ளார். (த)


## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



சுன்னாகம்
திரு.திருமதி சிவாகர் மைதிலி
தம்பதியரின் புதல்வி

# பவுத்ரி

அவர்கள் பல கலைகளும் கற்று செல்வ நிறைவில் நீடு வாழ வாழ்த்துபவர்கள் அப்பா, அம்மா, அண்ணா, தாத்தா, அம்மம்மா, பெரிய மாமா, சின்ன மாமா, பூட்டிமார்

2nd BIRTHDAY

[C/5311]

## சனிக்கிழமை வங்கிச் சேவை
## (SATURDAY BANKING)

- கடந்த 05.10.2002 இல் இருந்து கொமர்ஷல் வங்கியின் யாழ் கிளை சனிக்கிழமை வங்கிச் சேவையினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந் நாளில் யாழ் கிளையானது காலை 10.00 மணி தொடக்கம் மாலை 2.30 மணி வரை வாடிக்கையாளருக்கான சகல சேவைகளையும் வழங்கும்.
- வாடிக்கையாளரின் வசதி கருதியும் வர்த்தகர்களின் தேவைகளை முன்னிட்டும் ஆரம்பித்த இச் சேவையினைப் பூரணமாக பயன்படுத்தி நன்மையடைக

குறிப்பு:- மூன்றாம் (3) நபர் காசோலை மீளப் பெறுகை மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

## கொமர்ஷல் வங்கியின் "அருணலு" சேமிப்புக் கணக்கு

வைத்திருப்பவர் களுக்கான

## கல்வி ஊக்குவிப்பு

நடைமுறை ஆண்டின் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலை ரீதியில் புள்ளிகளின் அடிப்படையில் 1ம், 2ம், 3ம் இடம்பெற்ற மாணவர்கள் இவ் வங்கியில் "அருணலு" சிறுவர் சேமிப்புக் கணக்குத் திட்டத்தில் இணைந்திருப்பின் அவர்களுக்கு வங்கியினால் வெகுமதிகள் வழங்கப்படும்.

விபரங்களுக்கு முகாமையாளரை அனுகவும்

BEST BANK IN SRI LANKA Rated by Global Finance

COMMERCIAL BANK

Banker Bank of the Year 2001 Sri Lanka

474, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்


இப்பபத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 02.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.